பக்கங்கள்:-26

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 06 | சனிக்கிழமை | 20.01.2024 | அதிர்வு 172 |
|---|---|---|---|---|---|

## மலையகத் தலைவர்களை சந்தித்த இந்தியத் தூதுவர்



இந்திய வம்சாவளி இலங்கைத் தமிழ் சமூகத்தின் அரசியல் தலைவர்களை இலங்கைக்கான இந்தியத் 06▶



# இந்த வருடம் மாற்றம் வரும்

## மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெற்ற அநுர எம்.பி. நம்பிக்கையுடன் தெரிவிப்பு

**“புதியதொரு மாற்றத்தை நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்றனர். அந்த மாற்றத்தை இந்த வருடம் ஏற்படுத்த முடியும் என நம்புகின்றோம்.”**

**- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.** 05▶

### அணிசேரா அமைப்பின் மாநாட்டில்

## பாலஸ்தீன விடுதலைக்காக குரல் கொடுத்த ஜனாதிபதி




“ஐக்கிய நாடுகள் சபைக்குள் காணப்படும் யோசனைகள் மற்றும் இந்த மாநாட்டின் முன்மொழிவுகளுக்கு அமைய, மேற்குக் கரை, காஸா பகுதி மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகள் பாலஸ்தீனத்தின் 06▶




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் நாளை திருகோணமலையில். அதற்கு முன்னர் கட்சியின் மத்திய குழு இன்று அங்கு கூடுகின்றது. நாளைய தேர்தல் தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் இன்று நடக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்தத் தேர்தலை ஒட்டி கட்சிக்கு வெளியில் பலத்த சண்டப் பிரசண்டம் தாராளம். அது தப்பில்லை. தமிழர்களின் 06▶

AIRPORT PICKUP & DROP
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING



KDH
FOR
VAN RENT A/C
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882
+94 753 770 230

திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய
"UNEVEN JUSTICE"
என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு :

# சமனற்ற நீதி

## நூல் வெளியீடு

**ராஜ் ராஜரட்ணம்,** 1957 இல் இலங்கையில் பிறந்தார். இவருடைய தந்தையார் ராஜரட்ணம் அவர்கள் உலகப் புகழ் பெற்ற சிங்கர் நிறுவனத்தில் உயர்நிலை அதிகாரியாகக் கடமையாற்றியவர். இவரின் பூர்வீகம், யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள "அல்வாய்" கிராமம் ஆகும்.


ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆரம்பக் கல்வியை இலங்கையிலும் இந்தியாவிலும் கற்றார். உயர்கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டு, சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியானார். அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். சேஸ் மேன்ஹாட்டன் வங்கியில் நிதிப் பகுப்பாய்வாளராகத் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். 1997 ஜனவரியில், தனது சொந்த நிறுவனமான உலகப்புகழ்பெற்ற "கலியன்" முதலீட்டு நிதியத்தை நிறுவினார். 2009 இல், அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் ராஜ் ராஜரட்ணத்தை அதிரடியாகக் கைது செய்தது. அமெரிக்க அரசு அவர் மீது ஒருதொகை "உட்தகவல்" வணிகக் குற்றங்களைச் சுமத்தியது. குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு அரசுத் தரப்பு பல்வேறு அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் அவர்மீது பிரயோகித்தது. தன்மீது சுமத்தப்பட்டவை பொய்க் குற்றச்சாட்டுக்கள் என்பதில் உறுதியாக நின்ற ராஜ் ராஜரட்ணம் இறுதிவரை அமெரிக்க அரசுக்கு எதிராகச் சட்டப் போராட்டத்தை நடத்தினார். நீதிமன்றம் தனக்கு நீதி வழங்கும் என நம்பினார். ஆனால், அமெரிக்க நீதித்துறையிலுள்ள பேராசை பிடித்த சில தனிநபர்களின் சதிகளாலும் பொய்ச் சாட்சிகளாலும் அவர் வஞ்சிக்கப்பட்டார். அவருக்குப் பதினொரு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கையில் ராஜ் ராஜரட்ணத்தின் குழந்தைப் பருவம் முதல் அவரது ஐம்பத்துநான்காவது வயதில் அமெரிக்கச் சிறையில் அடைக்கப்பட்டது வரையான வரலாற்றை விவரிக்கும் நூலை அவர் சிறையில் இருந்தபோது எழுதினார். இந்நூல் Uneven Justice என்ற தலைப்போடு 2021 இல் ஆங்கிலத்தில் வெளியாகி மிகுந்த கவனத்தைப் பெற்றது. அந்நூல் இப்போது தமிழில் வெளியாகிறது.

அமெரிக்க நீதித்துறையிலுள்ள ஊழல்களையும் குறைபாடுகளையும் உள்ளது உள்ளபடியே தைரியமாகச் சொல்லும் இந்நூலிலுள்ள ஒவ்வொரு எழுத்திலும் அநீதியாகத் தண்டிக்கப்பட்ட ஒரு மனிதனின் நீதி கோரிய குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

**சமனற்ற நீதி : மாணவர்கள், இளைஞர்களிடையே எந்தவொரு விடயத்தையும் அச்சமின்றி எதிர்கொள்ளக்கூடிய தன்னம்பிக்கையையும், உந்துதலையும் வழங்குகிறது. இந்நூல் நிதி, நிர்வாகம், சட்டம் மற்றும் வணிகத்துறையில் உள்ளவர்கள் சவால்களை எதிர்கொள்ளும்போது தங்களுடைய பாதையை நேர்வழியில் அமைத்துக்கொள்ள வழிகாட்டியாகவும் அமைகிறது.**

**இந்நூல் வெளியீட்டு நிகழ்வில்
திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் நேரடியாகக் கலந்துகொண்டு
ஆற்றவுள்ள சிறப்புரையானது
பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.**




காலம் : 20.01.2024 சனிக்கிழமை
நேரம் : பி.ப 2.45 மணி
இடம் : ஹூவர் கலையரங்கம், மருத்துவப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்நிகழ்வை நேரலையாக
ஐ.பி.சி தொலைக்காட்சி ஊடாகவும்
ஐ.பி.சி வலையொளியூடாகவும்
சமனற்ற நீதி என்ற முகநூல் வழியாகவும்
பார்வையிட முடியும்.

அனுசரணை
The Jaffna Teaching Hospital Foundation
synamon global

Live Streming
சமனற்ற நீதி
IBC தமிழ்
TV & Youtube



# ஒலுவில் வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் தொலைக்காணொலி ஊடாக நடத்தப்படும்

தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் மறுஅறிவித்தல் வரை தொலைக்காணொலி ஊடாக நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மழையுடனான காலநிலையினால் இந்தப் பல்கலைக் கழகம் பாரியளவில் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இதன்படி, குறித்த பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்படவிருந்தன.

இதுதொடர்பில், நேற்று இடம்பெற்ற ஆலோசனைக் குழு கூட்டத்தின் போது கல்வி நடவடிக்கைகளை தொலைக்காணொலி மூலம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகள் சீரமைக்கப்பட்டு வருவதன் காரணமாக, கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளன என அந்த பல்கலைக் கழகத்தின் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் தெரிவித்துள்ளார்.

# வங்கிச் சட்டத்தில் திருத்தங்களை விரைவில் நிறைவு செய்ய வேண்டும்

## சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் பிரதானி பீட்டர் ப்ரூயர் தெரிவிப்பு



"நிதித்துறையின் ஸ்திரத்தன்மையைப் பாதுகாக்கவும், பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் திறனை அதிகரிக்கவும் இலங்கை அதிகாரிகள், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழான உறுதிப்பாட்டிற்கு ஏற்ப வங்கி சட்டத்தில் அவசரமாக திருத்தங்களை நிறைவு செய்ய வேண்டும்."

– இவ்வாறு சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் பிரதானி பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –


"இலங்கையில் வங்கி மறுமூலதனத் திட்டத்தை செயற்படுத்தி, நிதிக் கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டும். நெருக்கடி முகாமைத்துவ கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

வருவாய் அடிப்படையிலான ஒருங்கிணைப்பை நிலைநிறுத்தும் போது நியாயமான சுமை பகிர்வை உறுதிசெய்வதற்கு, சொத்து வரியை அறிமுகப்படுத்துவதற்கான விரைவான முன்னேற்றம் முக்கியமானது.

வணிகக் கடன் வழங்குநர்களுடன் விரைவில் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவது முக்கியமானதாகும். இரண்டாவது மீளாய்வின் போது கொள்கை ரீதியான ஒரு இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கும் என வலுவாக நம்புகிறோம்.

48 மாதகால விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டின் கீழான இரண்டாவது மீளாய்வு எதிர்வரும் வசந்த காலத்தில் இடம்பெறும். திகதி இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை. வரிச் சலுகைகள் நடைமுறையை தொடராமல் இருப்பது முக்கியமானதாகும். இந்த முடிவை தொடர்வதாக எங்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது." – என்றார்.




கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக அரங்கம்
மஹாகவி
நூல்கள்
மஹாகவி
உருத்திரமூர்த்தியின்
ஆளுமைப்பகிர்வும் கலந்துரையாடலும்
"பிஞ்சுப்பாடல்கள்" அரங்காற்றுகை
காலம் : 20.01.2024
நேரம் : மாலை 3.00 மணி – 5.30
சுழிபுரம்
+94770780657, 0757670149


கே.ஏ.எஸ். சத்தியமனை நூலக அரங்கம்
மஹாகவியின்
ஆளுமைப்பகிர்வும், கலந்துரையாடலும்
"பிஞ்சுப்பாடல்கள்" அரங்காற்றுகையும்
ஈழத் தமிழ் இலக்கியத்தில் மக்கள் வாழ்வியலைப்
பேசுபொருளாக்கியிருந்தவர்களுள் து. உருத்திரமூர்த்தி மஹாகவி அவர்களை
நவீனக் கவி முன்னோடிகளில் ஒருவராகக் கூறுவது மரபு!
தலைமை
திரு. சோ.தேவராஜா
உரையாளர்கள்
சி.ரமேஷ்
" நவீன கவிதை இயங்கியலில் மஹாகவி "
மல்லிகா செல்வரட்னம்(அராலியூர் நிலா)
" ஊர்கூடித் தேர் இழுத்த கவி "
சின்னராஜா விமலன்
" கவியின் கிராமிய வாழ்வியலில்... "
கலாநிதி க.ஸ்ரீகணேசன்
" இருநாடகங்கள் "
அ.முருகதாஸ்
" கவியின் காவியங்களினூடு "
ந.இரவீந்திரன்
" சமூக நோக்கில் மஹாகவி "
அரசி விக்னேஸ்வரன்
" ஒரு கவியின் வாழ்வியல் "
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!
sathiamanai.library@gmail.com


நினைவேந்தல்
நிகழ்வு
CLICK HERE
VIDEO
ஈழத்தமிழர்
மனங்களில்
நீங்கா இடம் பிடித்த
கப்டன் விஜயகாந்
காலம் : 10.02.2024 (சனிக்கிழமை)
இடம் : Gemeinschaftszentrum Affoltern
Bodenacker 25, 8046 Zürich
நேரம் : 15.00
அனைவரையும் அன்புரிமையோடு
அழைக்கிறோம்
தொடர்புகளுக்கு
0764183254, 0789006668, 0794504050, 0797459415, 0789009006, 0765798182

# ராணி சீதரனின் அறிமுக விழா இன்று திருகோணமலையில்!

(அபு அலா)

அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ராணி சீதரனின் "கடவுள்தான் அனுப்பினாரா" என்ற நூல் அறிமுக விழா இன்று சனிக்கிழமை மாலை 3.45 மணியளவில் திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக ஓய்வுபெற்ற அதிபர் சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமலை நவம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக வைத்தியலிங்கம் ஜெயச்சந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி

சுபாசினி சித்திரவேலு, இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் க.பிரபாகரன், தனியார் நிறுவன நிதிக் கணக்காளர் தயாளலிங்கம் பிரசாதனன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் அறிமுகம் மற்றும் நயவுரையை எழுத்தாளர் தில்லைநாதன் பவித்திரனும்,

நன்றியுரையை அன்பின் பாதை றொசில்டா அன்டனும் நிகழ்த்தவுள்ளனர்..




## இந்த வருடம் மாற்றம் வரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களை அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. நேற்று சந்தித்து ஆசி பெற்றார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லால் காந்தவும் இதில் கலந்துகொண்டிருந்தார்.

மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அநுரகுமார



திஸாநாயக்க எம்.பி.,

"வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீட்க வேண்டிய தேவைப்பாடு எமக்கு உள்ளது. நாட்டு மக்களும் புதியதொரு மாற்றத்தையே எதிர்பார்க்கின்றனர். மக்களின் எதிர்பார்ப்பும், எமது எண்ணமும் ஒன்றாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 18 தடவைகளுக்கு மேல் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார். அரச தலைவர்கள் வராத நாடுகளுக்குக் கூட சென்று உரையாற்றுகின்றார். அதாவது அவர் ஜனாதிபதிப் பதவியைத் தற்போது அனுபவிக்கத்



தொடங்கியுள்ளார்.

அடுத்து என்ன தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார். ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் எனக் கருதுகின்றனர். நாடாளுமன்றத் தேர்தலுக்கும் அஞ்சுகின்றனர். ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை முதலில் நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்." - என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரலாற்றுப் பெருமைமிக்க கட்சி அது என்பதால் ஆதரவாளர்கள், பொதுமக்கள் மத்தியில் இழுபறி இருக்கும். அது தவிர்க்க முடியாததுதான்.

ஆனால் கட்சி பிரமுகர்கள் நாகரிகம் பேண வேண்டும். அது தவறியிருப்பது கண்டனத்துக்குரியது. தலைமைக்கு உட்கட்சித் தேர்தல் நடப்பது கட்சியின் ஜனநாயகப் பண்புகளை வலுப்படுத்தும்



என்று பிரதான வேட்பாளர்கள் இருவரும் – சிறிதரனும் சுமந்திரனும் – கூறி வருகின்றார்கள். அது உண்மைதான்.

உட்கட்சித் தேர்தல் கட்சிக்குரிய ஜனநாயக மாண்புகளுடனும் உரிய பண்புகளுடனும் நடத்தப்படுமானால் அந்த முறைமை கட்சியை வலிமைப்படுத்தும் என்பது உண்மைதான்.

பிரதான வேட்பாளர்கள் இருவரும் அந்தப் பண்புகளை மதித்துத்தான் நடந்து வருகின்றனர். இருவருமே கட்சியின் தலைவர் தேர்வில் வாக்களிக்கப் போகும் பொதுக்குழு உறுப்பினர்களைச் சந்தித்து ஆதரவைக் கோரி வருகின்றனர். அதுதான் முறைமை. அது சரியே. அதிலும் கூட பெரும்பாலும் நாகரிகம் பேணி வருகின்றனர். தங்களுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும் என்பதை கூறுகின்றார்கள். எதிர்த் தரப்புக் குறித்து மோசமான விமர்சனங்களுக்கு இறங்கவில்லை. தலைவர் தேர்தல் முடிந்த பின்னர் ஒரு கட்சிக்குள் ஒன்றாகப் பயணிக்க வேண்டிய யதார்த்தம் புரிந்தவர்கள் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும்.



ஆனால் இந்தத் தேர்தலில் டம்மி வேட்பாளராக இறங்கிய சீனித்தம்பி யோகேஸ்வரன் அந்த நாணயத்தை – பண்பை – தவறவிட்டு சின்னத்தனமாக நடந்து கொண்டுள்ளார்.

அதன் மூலம் அவர் யாருக்காக டம்மி வேட்பாளராக இறங்கினாரோ – அல்லது அவரை யார் டம்மி வேட்பாளராக இறக்கினாரோ – அவரையும் சின்னத்தனமானவராக்கிவிட்டார் என்பதுதான் உண்மை.

'சுமந்திரன் தலைவராக வந்தால் தமிழ்த் தேசியம் அழிவது உறுதி' என்று தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாள் இருக்கையில் யாழ்ப்பாணத்துக்கு வந்து, பகிரங்கமாக ஊடகவியலாளர் மாநாடு நடத்தி, அவர் அறிவித்திருப்பது அவர் யாரை ஆதரிக்கின்றாரோ அவருக்குத்தான் இழுக்கு.

இதில் இரண்டு விடயங்கள்.

முதலாவது – இந்த விவகாரத்தில் தமிழரசுக்குள் இன்னும் பலருக்குப் பட்டறிவு பட்டுத்தெளிந்தும் வரவில்லை போலும். கடந்த பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் இப்படி இதே போன்ற தமிழ்த் தேசியக் கருத்தியலுடன் கட்சிக்குள் இருந்து சுமந்திரனுக்கு எதிராகப் பிரச்சாரப் பீரங்கிகள் புறப்பட்டு, கடைசியில் என்னவானார்கள்? தங்களுக்கு அதுவரையில் இருந்த பதவியை பொதுமக்கள் பிடுங்கிக் கொண்டமையைத்தான் அவர்கள் பிரதிபலனாக – பரிசாக – இதே போன்ற ஒரு தேர்தலின் பெறுபேறாகக் கண்டார்கள். பொதுமக்களிடம் அவர்கள் படித்த அதே பாடத்தை, சீனித்தம்பி யோகேஸ்வரன் அணியும் தமிழரசுப் பொதுக்குழு உறுப்பினர்களிடம் படிக்க நேர்ந்தாலும் நேரும்.

அடுத்தது – இப்படிக் கூறிய சீனித்தம்பி யோகேஸ்வரனும் அவரது கூட்டணியும், தப்பித் தவறி சுமந்திரன் பொதுக்குழு உறுப்பினர்களால் தமது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் அதற்குப் பின் எந்த முகத்துடன் கட்சிக்குள் இருந்து இயங்குவர்? அண்ணா தி.மு.க. மாதிரி 'அண்ணா தமிழரசுக் கட்சி' தொடங்க வேண்டியதுதான். (அவர்கள் பெரும்பாலும் தம்பி பிரபாகரனின் வாரிசுகள் தாங்களே என்று பம்மாத்து நடிப்புக் காட்டுவதால் 'அண்ணா தமிழரசு' அல்ல 'தம்பி தமிழரசுக் கட்சி' தொடங்கினால் பொருத்தமாக இருக்கும்.)

சீனித்தம்பி யோகேஸ்வரனின் சொந்த இடமான மட்டக்களப்பில் கருணா தனது கட்சியின் தலைமை அலுவலகத்தை திறந்து வைத்து, தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை பற்றிப் பேசியிருக்கின்றார். அதை ஒட்டிய விமர்சனங்கள்தான் இப்போது ஊடகங்களில் அதிகம் வருகின்றன.

கருணாவை 'எட்டப்பன்', 'காக்கை வன்னியன்' என்று ஒப்பீடுகள் தாராளமாக நடக்கின்றன.

'சுமந்திரன்தலைவராகவந்தால்தமிழ்த் தேசியம் அழிவது உறுதி!' என்று தமிழரசுக்கட்சியினருக்குஅரசியல்பாடம்போதிக்கும் மாமேதை சீனித்தம்பி யோகேஸ்வரன், தானைத் தலைவன் கருணாவை வரவேற்று மாலை அணிவித்து அரசியல் செய்து, பிள்ளையானுடன் சேர்ந்து கோவில் வழிபாடு நடத்தி தமிழ்த் தேசியத்தை வளர்க்கும் காட்சிகள் அடங்கிய படங்களை மட்டக்களப்பில் இருந்து சில நண்பர்கள் அனுப்பி இருந்தனர். அதை இங்கு, இச்சமயத்தில் இடம் பெற செய்வது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

அப்படி கருணாவுக்கு மாலை அணிவித்து அரசியல் செய்வது தப்பில்லை. பிள்ளையானுடன் சேர்ந்து பிள்ளையாரை வழிபடுவதும் தப்பில்லை. அதையெல்லாம் செய்து கொண்டு, சுமந்திரன் தமிழரசுத் தலைவரானால் தமிழ்த் தேசியம் அழிந்து விடும் என்று 'தேசியக் கயிறு' விடுவதுதான் தப்பு. அதுவும் உள்கட்சி தேர்தல் விடயத்தில் இப்படிப் பொதுமேடை ஏறி, கட்சியை நாறடிப்பது பெரும் தப்பு.

நாளைக்கு பின்னர் கட்சித் தலைமையை ஏற்கப் போகின்றவர், சீனித்தம்பி யோகேஸ்வரனின் இந்த சின்னத்தனம் குறித்து எத்தகைய பிரதிபலிப்பைக் காட்டப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

சம்பந்தனும் மாவையும் தமது தலைமைத்துவத்தின் போது கோட்டை விட்ட விடயம் கட்சியின் கட்டுக்கோப்பு, ஒழுங்கைப் பேணத் தவறியமைதான். சீனித்தம்பி யோகேஸ்வரனின் நடத்தை விடயத்தில்–அவரின்பகிரங்கக்கருத்துவெளிப்பாட்டு நடவடிக்கையையே – கட்சிக் கட்டுக்கோப்பு மற்றும் ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கான முதல் அமிலச் சோதனையாக புதிய தலைவர் பயன்படுத்தினால் கூட நல்லது.

புதிதாகத் தலைவராகத் தெரிவாகின்றவரும் மாவையர் மாதிரி கட்சித் தலைமையை வகித்து, அதைத் தலைவராக நடத்துவதை விடுத்து, வெறும் போராட்ட முழக்கங்களோடு அடங்கி விட்டால், தமிழரசுக்குப் பாடை கட்ட வேண்டியதுதான்...!

## பாலஸ்தீன விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு உகாண்டாவின் கம்பாலாவில் நேற்று நடைபெற்ற அணிசேரா அமைப்பின் 19ஆவது அரச தலைவர் மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

மேலும், காஸா பகுதியின் இன அமைப்பு மாறக்கூடாது எனவும், ஐந்து வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசு ஸ்தாபிக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

## மலையகத் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூதுவர் சந்தோஷ் ஜா நேரில் சந்தித்து உரையாடினார்.

கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நேற்று இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது தமிழ்ச் சமூகத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கான திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதுடன் பெருந்தோட்ட மக்களின் நலனுக்கான அவர்களின் அனைத்து முயற்சிகளிலும் இந்தியா உறுதியாக நிற்கும் என்று இந்தியத் தூதுவர் தெரிவித்தார்.

# தடைப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பெப்ரவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு



**"இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி இறுதி ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் பெப்ரவரி மாதம் முதல் ஆரம்பிக்கப்படும்."**

**- இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த சவாலான ஆண்டில் வருமானம் மற்றும் செலவுகளில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. 2022ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மொத்த வரி வருமானம் 1,751 பில்லியன் ரூபாவாகும். அதில் 1265 பில்லியன் ரூபா அதாவது 72 வீத அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்பட்டது. மேலும், சமுர்த்தி உட்பட வறிய மக்களுக்கான நலன்புரி கொடுப்பனவுகளுக்காக 506 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. வரி வருமானம் இந்த இரண்டு செயல்பாடுகளுக்கு செலவிடவே போதுமானதாக உள்ளது.

மேலும், நாம் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த வேண்டும். வட்டியை செலுத்த 1,065 பில்லியன் ரூபா செலவிடப்பட வேண்டும். மேலும், 715 பில்லியன் ரூபா மூலதனச் செலவினங்களுக்காக கடன் பெற்று செலவிடப்பட்டுள்ளது. இலங்கையின் வரலாற்றில் சுதந்திரத்திற்குப் பின்னர் 05 வருடங்களைத் தவிர முதன்மைக் கணக்கில் மேலதிக இருப்பு எதுவும் இருக்கவில்லை.

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலம் 1,550 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. சுங்கத் திணைக்களம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சுங்க வரிகள் மூலம் 922 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. மதுவரித் திணைக்களம் 169 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. மோட்டார் வாகன திணைக்களம் 20 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டியுள்ளது. 219 பில்லியன் ரூபா வரி அல்லாத வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 16 பில்லியன் ரூபா நன்கொடைகளாகப் பெறப்பட்டுள்ளது. பல்வேறு வைப்புத்தொகைகள் மூலம் 303 பில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

மேலும், மக்களிடமிருந்தும் மற்றும் ஏனைய அனைத்து வகையிலும் 3,201 பில்லியன் ரூபாவை 2023 ஆம் ஆண்டில் திறைசேரி பெற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டை விட அதீத முன்னேற்றம் என்பதைக் கூற வேண்டும். 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டில் 1,000 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. அதைவிட வேகமாக செலவுகள் அதிகரித்துள்ளன.

அரச ஊழியர் சம்பளம், நலன்புரி மற்றும் நிவாரணம் உள்ளிட்ட விடயங்களுக்காக 2,160 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2,263 பில்லியன் ரூபா வட்டி மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், அரசாங்கம் நாளாந்த செலவுகளுக்காக 4,394 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது. அந்த ஆண்டில் அரச வருமானம் 3,201 பில்லியன் ரூபா. எனவே, 2023 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளை நடத்துவதற்கு போதுமான வருமானம் பெறப்படவில்லை.

ஆனால் 2023ஆம் ஆண்டில் 7,727 பில்லியன் ரூபா திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. மூலதனச் செலவுகள் மற்றும் கடனைத் திருப்பிச் செலுத்தும் வகையில் 8,898 பில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. திறைசேரியிலிருந்து 13,292 பில்லியன் ரூபா வெளியே சென்றுள்ளது. ஆனால் அரசாங்கத்திற்கு கிடைத்த நிதியின் அளவு 3,201 பில்லியன் ரூபா மாத்திரமே ஆகும்.

2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அரசாங்கம் 10,091 பில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளது. இந்தக் கடன்கள் உள்நாட்டில் திறைசேரி பத்திரங்கள் மற்றும் திறைசேரி பிணைமுறிகள் மூலம் பெறப்பட்டுள்ளன.

இதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான கடன் மறுசீரமைப்பு குறித்து கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதன் பின்னர் பெப்ரவரி மாதம் முதல் அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

இந்த ஆண்டு வீதிகளை அபிவிருத்தி செய்ய உலக வங்கி கடன் உதவியின் கீழ் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுள்ளோம். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் வீதிகளை புனர்நிர்மாணம் செய்ய சவூதி அரேபியாவின் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இந்த சிரமங்களுக்கிடையில் கூட மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்திக்காக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவராக உள்ள நாடாளுமன்ற உறுப்பினருக்கு 150 மில்லியன் ரூபாவும்சி, றிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 50 மில்லியன் ரூபா கிராமிய அலுவல்கள் அமைச்சின் ஊடாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்திப் பணிகளையும் ஆரம்பிக்க நாம் தயாராக உள்ளோம்" – என்றார்.

# அஸ்வெசும திட்டத்திற்கு புதிய பயனாளர்களை இணைத்துக் கொள்வதற்கான திகதி அறிவிப்பு



அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் புதிய பயனாளர்களை இணைத்துக் கொள்வதற்கான புதிய விண்ணப்பங்களை கோரும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் புதிய பயனாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் எனப் பதில் நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அஸ்வெசும நலன்புரி திட்டத்தில் மேலும் 3 லட்சம் குடும்பங்களை இணைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுவரை கிடைத்துள்ள 6 லட்சத்து 4 ஆயிரம் அஸ்வெசும மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதி அமைச்சரின் அண்டப் புளுகு

தன்னுடைய நீதி,நிர்வாகம், வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல்,போன்றவை தொடர்பில் வெளிநாடுகளுக்கு அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு காட்டும் நாடுகளில் இலங்கையை யாரும் மிஞ்சுவிட முடியாது. இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் இது விடயத்தில் தமது பங்களிப்பை காத்திரமாக வழங்கி இருக்கின்றார்.

இலங்கையின் நீதி அமைச்சர் பதவி என்பது எத்தகையது என்பதை அப்பதவியில் இரு அமைச்சர்கள் இருந்த காலத்தில் இருவரிடமும் நாடாளுமன்றத்தில் தெளிவுபட - வெளிப்படையாக - பகிரங்கமாக - எடுத்துரைத்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசு கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் அமைச்சர் போன்றவர் இலங்கையின் நீதி அமைச்சர் என்று அந்த அமைச்சர் பதவியில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் அலி சப்ரி மற்றும் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் இருக்கும்போது நாடாளுமன்றத்தில் நேரடியாக எடுத்துரைத்திருந்தார் சுமந்திரன்.

எல்லா பக்கங்களினாலும் தரையால் சூழப்பட்ட நாடு ஆப்கானித்தான். அதற்குக் கடற்கரையோ துறைமுகங்களோ இல்லை. துறைமுகமே இல்லாத நாடு தனக்கு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து அமைச்சர் ஒருவரை நியமித்தால் அது எவ்வளவு தூரம் கேலிக்கூத்தானதோ அதுபோல நீதியே இல்லாத இலங்கைத் திருநாட்டில் நீதி அமைச்சர் ஒருவர் பணியாற்றுவது எவ்வளவு தூரம் கேலிக்கிடமானது என்று எள்ளி நகையாடி இருந்தார் சுமந்திரன்.

இலங்கையின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்கள் போன்றவை சர்வதேச மட்டத்தில் மிக மோசமாக விமர்சிக்கப்படும் சூழலில் -

இலங்கையில் நீதி செயற்பாட்டை வலுப்படுத்துவதற்காக, சர்வதேச தரத்திற்கு அமைய வெளிப்படைத்தன்மையைப் பாதுகாத்து, புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் கொண்டு வரப்படுகின்றன என நீதி,சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் அன்ட்ரு பிராஞ்சிடம் கூறியிருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளருக்கும், நீதியமைச்சருக்கும் இடையிலான பேச்சு நேற்று நீதியமைச்சில் நடைபெற்றது.

உலக நாடுகளில் நீதி செயற்பாட்டை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவின் அனுபவங்கள் சம்பந்தமாகவும் இணைப்பாளர், நீதியமைச்சருடன் கருத்துக்களை பரிமாறிக்கொண்டார் எனக் கூறப்பட்டது.

எதிர்காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளதாகவும், சட்டத்தின் ஆதிபத்தியத்தை உறுதிப்படுத்த இலங்கை எடுக்கும் முயற்சியில், ஐக்கிய நாடுகள் அமைப்பின் வழிக்காட்டல்கள் மிகவும் முக்கியம் எனவும் அமைச்சர் இந்தச் சந்திப்பின் போது சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் நீதிச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்காக சர்வதேச தரத்திற்கு அமைய, வெளிப்படைத் தன்மையை பாதுகாத்தே, புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுகின்ற என்ற நீதி அமைச்சரின் கூற்று முற்றிலும் திரிவுபடுத்தப்பட்ட விவகாரம். அது உண்மை நிலைமை அல்ல. உண்மைக்கு முற்றிலும் புறம்பானது.

இலங்கையின் நீதித்துறை தொடர்பிலும், சட்டவாக்கல் முறைமை தொடர்பிலும் இலங்கையின் நீதி அமைச்சர் என்ன பீற்றிக் கொண்டாலும் - எப்படிப் புளுகினாலும் - உண்மை நிலைமை சர்வதேசத்திற்கு தெரிந்தது தான்.

மனித நாகரீகத்துக்கே ஒவ்வாத காட்டுச் சட்டம் - காட்டுமிராண்டிச் சட்டம் - அடிப்படை நீதி முறைமைகளுக்கே முரணான சட்டம் - ஒரு சட்டம் என்றே மதிக்கப்பட முடியாத கொடூர (Draconian) முறைமை - என்று கருதப்படுகின்ற பயங்கரவாத தடுப்புச் சட்டம் இந்த நாட்டில் கடந்த 45 ஆண்டுகளாக முழு அளவில் நடைமுறையில் உள்ளது.

அதன் கீழ் பல்லாயிரம் பேர் கைது செய்யப்பட்டு, கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டு, வழக்கு விசாரணைகளோ, கேட்டு கேள்வியோ இன்றி பல பத்தாண்டுகள் தடுப்பு காவலிலும், நீதி முறையற்ற தண்டனைச் சிறைகளிலும் வாடி, வதங்கி, வாழ்வைத் தொலைத்துள்ளனர். இன்னும் - இன்றும் - பலர் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த மோசமான காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிராக சர்வதேசமே குரல் கொடுக்கின்ற போது, அதை மாற்றுவதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் வரை வாக்குறுதிகள் வழங்கி , பல பத்தாண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் அது மாற்றப்படவே இல்லை.

முன்னரும் அவ்வப்போது மேற்கொண்டமை போல, இப்போதும் அந்தச் சட்டத்திற்கு மாற்றீடானவேறு சட்டம்கொண்டுவரப்படுகின்றது என்ற ஒரு முயற்சி கண்துடைப்பாக முன்னெடுக்கப்படுகிறது. ஆனால் அதன் பெயரில் இன்னொரு குரூரச் சட்டமே இப்போதும் முன்மொழியப்பட்டிருக்கின்றது.

இப்போது கொண்டு வரப்படும் நிகழ்நிலை காப்புச் சட்டம் கூட சர்வதேச தரத்துக்கு உட்பட்டது அல்ல. அப்படி இருக்கையில், சர்வதேச தரத்திற்கு அமைய, வெளிப்படைத் தன்மையைப் பேணும் விதத்தில், புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன என்று அண்டப் புளுகு புளுகுகின்றார் நீதி அமைச்சர்.




# 'ஒரே சீனா' கொள்கைக்கு முழு ஆதரவு சீனத் தூதரிடம் சபாநாயகர் தெரிவிப்பு



அரசாங்கம் என்ற வகையில் இலங்கை எப்பொழுதும் ஒரே சீனா என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங்கிடம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று நாடாளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் நாடாளுமன்றபதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவும் கலந்து கொண்டார்.

சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக் குழுவின் தலைவர் ஸாவோ லெஜின் புதுவருட வாழ்த்துச் செய்தியை இதன்போது சீனத் தூதுவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. "ஒரே சீனா" என்ற கொள்கை தொடர்பில் இலங்கை வழங்கிவரும் ஆதரவுக்கு சீனத் தூதுவர் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

அரசாங்கம் என்ற வகையில் இலங்கை எப்பொழுதும் ஒரே சீனா கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர திட்டம் உள்ளிட்ட இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீன முதலீட்டு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இரு தரப்பினருக்குமிடையில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.




# யாழில் நேற்றுத் தொடக்கம் சர்வதேச வர்த்தக சந்தை

14 ஆவது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் முற்றவெளியிலே காலை 10:30 மணிக்கு ஆரம்பமான இந்த வர்த்தக கண்காட்சி இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட பீடாதிபதி ந.கெங்காதரன், யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தினர், இந்திய துனைத் தூதரக அதிகாரிகள் அனுசரணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



















**உரலார் கேள்வி :- என்ன? செருப்போடு நின்று பொங்கல் பானைக்குள் அரிசி போட்டு நன்றாக வாங்கிக் கட்டுகிறீர்கள் போல? விழுகின்ற திட்டுக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? 'மீம்ஸ்' போடும் சில பேர் மரியாதை குறைந்த சொற்களால் கூட உங்களை விமர்சிக்கிறார்களே. அது உங்களைப் பாதிப்பது இல்லையா? முகம் தெரியாமால் எழுதுகின்ற இவர்களையெல்லாம் கூட விட்டு விடுங்கள். யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகைக் காரர்கள் இது பற்றி விமர்சித்து நேரடியாகவே 'பத்தி' ஒன்றை எழுதியிருக்கிறார்களே. அவர்களுக்காவது பதில் சொல்லுவீர்களா? இல்லையா?**

**உலக்கையார் பதில் :-** இத்தகையவர்களின் கீழ்மைச் செயல்களுக்கு நான் என்றைக்கும் பதில் சொல்ல விரும்புவதில்லை. நீங்கள் கேட்டிருப்பதால் பதில் சொல்கிறேன். ஒரு கேள்விக்குள் பல கேள்விகளை அடுக்கியிருக்கிறீர்கள். ஒவ்வொன்றாய்ப் பதில் சொல்ல முயல்கிறேன்.

முதலில் நேர்மையுடனும், கலாசார அக்கறையுடனும் இச் செயல்பற்றிக் கருத்துரைத்திருக்கும் அன்பர்களுக்கான எனது தன்னிலை விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன்.

நான் 40 ஆண்டுகால 'டயபற்றிக்' நோயாளி. அந்நோயினால் என் கால்களில் 'நியுரோபதி' எனும் பாதிப்பு உண்டு. அதனால் என் கால்களில் நெருப்புச்சுட்டால் அது எனக்குத் தெரிவதில்லை. முன்பு ஒருமுறை பொங்கலின் போது காலில் நெருப்புச் சுடுவது தெரியாமல் அதிக நேரம் தணலில் கால் வைத்துக் கொண்டு நின்று பின் அதனால் பெரும் பாடுபட்டேன்.

அந்த அனுபவம் தான் நெருப்பு இருக்கும் இடங்களில் என்னைச் செருப்புப் போட வைக்கின்றது. எல்லாம் சரி, பானையில் அரிசி போடும் போதாவது கொஞ்சம் கவனித்து செருப்பைக் கழற்றி இருக்கக் கூடாதா? என்று கேட்பீர்கள். செய்திருக்கலாம்தான்! நினைப்பு வரவில்லை. அவ்வளவுதான்! யாழில் நடைபெறுகின்ற கூத்துக்களை விடவா எனது செருப்புக் கால் கலாசாரத்தைப் பாதித்து விடப் போகிறது? என்றாலும் இனி வரும் காலங்களில் இதனைத் தவிர்க்க முயல்கிறேன்.

இனி 'மீம்ஸ் குசும்பர்களுக்கான' எனது பதில் தொடர்கிறது.

எங்கே இந்த மாடு விழும்? எப்படியெல்லாம் இதற்குக் குறி சுடலாம்? என்று காத்திருக்கும் சிலபேர், இந்தச் சந்தர்ப்பத்தைச் சாட்டாக வைத்து என்னைப்பற்றித் தாழ்த்தி எழுதி, தம்மைக் கலாசாரக் காவலர்களாகக் காட்ட முயல்கிறார்கள்.

பாவம்! அவர்களை நினைக்கக் கவலையாக இருக்கிறது. இவர்களது தூற்றுதல்களையும், போற்றுதல்களையும் நான் கடந்து வந்து பல காலம் ஆகி விட்டது. அது தெரியாமல் என்னைக் கவலைப்படுத்தலாம் என நினைந்து இவர்கள் 'உழட்டிக்' கொண்டிருக்கிறார்கள். ஏதோ வகையில் என்னை விளம்பரப்படுத்தியதற்காக அவர்களுக்கு எனது நன்றிகள்!.

இத்தகையவர்களின் நோக்கம், பிழைகளைக் கண்டிப்பதல்ல. என்னை எப்படியும் தாழ்த்திவிட வேண்டும் என்பதே. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக நான் செய்து வரும் நல்ல விடயங்களில் ஒன்றைப் பற்றியேனும் மூச்சு விடக்கூட விரும்பாத இவர்கள், தேடிப்பிடித்து எனது பிழைகள் மேல் ஒளிபாய்ச்ச விரும்புகிறார்கள். அப்படி இவர்கள் என்மேல் பாய்ச்சும் அந்த ஒளியை, கொஞ்சம் திருப்பி, தங்கள் மேல் 'போக்கஸ்' பண்ணுவார்களே ஆனால், நான் இருக்கும் இடத்திற்கும் அவர்கள் இருக்கும் இடத்திற்குமான தூரத்தைத் தாமாக அவர்கள் அறிந்து கொள்வார்கள். பாவம்! அவர்களை விட்டு விடுங்கள்.

அடுத்து மரியாதைக் குறைவாக எழுதுவோர் பற்றிய உங்களது மற்றைய கேள்விக்கு வருகிறேன். என்னைப் பற்றி என்று இல்லை, வேறு எவரைப் பற்றி என்றாலும் ஒருவரின் தரம் அறியாமல் மரியாதைக் குறைவான வார்த்தைகளால் விமர்சிப்பது என்பது தவறு. அப்படி ஒருவர் விமர்சிக்கத் தலைப்படுகிறார் என்றால் அதைச் செய்பவர் மரியாதைக் குறைவானவராய் இருப்பார் என்பதுதான் உண்மை. 'நிலத்தின் தன்மை கால் காட்டும், காட்டும் குலத்தில் பிறந்தார் வாய்ச்சொல்' என்று, இவர்களைப் பற்றித் திருவள்ளுவர் அன்றே சொல்லிவிட்டார். அதற்கு மேல் இவர்களைப் பற்றி நான் என்னத்தைச் சொல்ல?

'உதயன்'பற்றி நீங்கள் கேட்காமல் விட்டிருக்கலாம். அவர்கள், மதிப்புக்குரியவர்களைத் தாழ்த்தி எழுதியேனும், வீழ்ந்து கொண்டிருக்கும் தங்களது வியாபாரத்தைப் பெருக்கப் பார்க்கிறார்கள். நல்ல மனம் இல்லாமல் அது எப்படி நடக்கும்? அவர்கள் எழுதியதை நினைக்கத்தான் சிரிப்பாக இருக்கிறது. எந்தத் தர்மம் பற்றியும் கவலைப் படாமல் 'ஊரைக் கொள்ளையடித்து உலையில் போட்டவர்கள்' எல்லாம், செருப்போடு உலையில் அரிசி போடுவதைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கியிருக்கிறார்கள். எல்லாம் காலத்தின் கோலம்.

**சல்லடையார் சலிப்பு - அவரைத் தொடுவான் ஏன்? கவலைப்படுவான் ஏன்?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- நமது திருமுறைகளைப் பாடி, தமிழில்தான் ஆலயக் கும்பாபிஷே**

**(12ஆம் பக்கம் பார்க்க)**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கங்களைச் செய்ய வேண்டும் என்று சிலர் வலியுறுத்தி வருகிறார்கள். அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** திருமுறைகள் மீதான அவர்களது பற்றினையும், தமிழ் மீதான பற்றினையும் பாராட்டுகிறேன். ஆனால் அவர்கள் சொல்வது சரி என்று தோன்றவில்லை. வடமொழியும், தமிழ்மொழியும் நெருக்கமான உறவு கொண்டவை. இன்றைய பிரச்சினைகளை மனதில் வைத்து அம்மொழிகளுக்கு இடையில் பகை வளர்ப்பது தவறென்றே கருதுகிறேன்.

அது மட்டும் அல்லாமல், நமது சைவ சமயத்தின், சாத்திர, தோத்திர நூல்கள் அனைத்தும் வேதத்தை முதல் நூலாகவும், ஆகமத்தைச் சிறப்பு நூலாகவும் ஏற்று வலியுறுத்தியிருக்கின்றன. இவ்விரண்டு நூல்களையும் இறைவனே படைத்தான் என்பதே அருளாளர்களின் கருத்தாய் இருக்கிறது. இறைவனால் படைக்கப்பட்ட அந்த நூல்களை நிராகரிக்கும் உரிமை நிச்சயம் எவருக்குமில்லை!

வேதங்கள், ஆகமங்கள் பற்றியும் வேள்விகள் பற்றியும் எங்களது தமிழிலும், சைவத்திலும் பரவலான பதிவுகள் உண்டு.

### சங்க இலக்கியங்களில்

புறநானூற்றில் வரும் 'பாஅல் புளிப்பினும் பகல் இருளினும் நாஅல் வேத நெறிதிரியினும் திரியாச் சுற்றமொடு முழுது சேண் விளங்கி' போன்ற பல பாடல்களில் வேதம் பற்றிய செய்திகள் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாமல் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதியவரின் பெயரை 'நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்' என்றே குறிப்பிடுகிறார்கள். சதுர்வேத பண்டிதராகச் சங்க காலத்திலேயே ஒருவர் விளங்கியிருந்தார் என்பதையும், அவரிடமே தொல்காப்பியர் பாயிரம் பெற விரும்பியிருக்கிறார் என்பதையும் இதன் மூலம் நாம் தெரிந்து கொள்கிறோம். அது போலக் காப்பிய இலக்கியமாகிய சிலப்பதிகாரத்தில், கண்ணகியின் திருமணம் வேத முறைப்படி நடந்ததை, 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட தீ வலம் வந்தது' என்ற வரிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. சங்கப் புலவராகிய நக்கீரர் தனது திருமுருகாற்றுப்படை எனும் நூலில் 'ஒருமுகம் மந்திர விதியின் மரபுளி வழாஅது அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே' என்றும் 'நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல் வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து' என்றும் வேதங்கள் பற்றியும், வேள்விகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

### திருமூலர்

இவர், தான் இயற்றிய திருமந்திரத்தில் 'வே-தமொடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்' எனவும் 'வேதங்கள் ஆட மிகும் ஆகமம் ஆட நாதன் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே' எனவும் வேதங்கள் பற்றிக் கூறியுள்ளார். அதுமட்டுமல்லாது வேதத்தை விட்ட அறம் இல்லை என்றும், வேதம் பற்றித் தர்க்கவாதம் செய்தல் கூடாது என்றும் இவர் வலியுறுத்தியும் உள்ளார் ('வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின் ஓதத் தகும் அறம் எல்லாம் உள. தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே'). அதுமட்டுமல்லாமல் வேதம், ஆகமம் பற்றித் தனித் தலைப்பிட்டே திருமூலர் அவற்றைக் கொண்டாடியும் இருக்கிறார்.

### காரைக்கால் அம்மையார்

இவர் தனது திரு இரட்டை மணிமாலையில் 'வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்கு ஆதியனை ஆதிரை நன்னாளானை' எனச் சிவனை வேதமாகவும் வேத முதலாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### திருஞானசம்பந்தப் பெருமான்

இவர் தனது பதிகங்களில் 'வேதத்தில் உள்ளது நீறு'என்றும், 'வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு' என்றும், பல இடங்களிலும் வேதம் பற்றியும், வேள்விகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்லாமல் 'வேத வேள்வியை நிந்தனை செய்து உழல் ஆதமில்லி அமணொடு தேரரை' என்று வேதாகமங்களை வெறுத்த சமண, சாக்கியர்களைப் பதிகந்தோறும் பத்தாவது பாடலில் சாடிப் பாடியதோடு, 'மாசுமெய்யர் மண்டைத் தேரர், குண்டர், குணமிலிகள் பேசும் பேச்சை மெய்யென்றெண்ணி அந்நெறி செல்லன்மின்!' என்று நமக்கு அறிவுரையும் கூறியுள்ளார்.

### திருநாவுக்கரசர்

'வேதங்கள் நான்கும் கொண்டு விண்ணவர் பரவி ஏத்த, பூதங்கள் பாடி ஆடல் உடையவன் புனிதன் எந்தை' எனவும், 'வேதியா! வேத கீதா! விண்ணவர் அண்ணா!' எனவும், 'வேதம் ஓதி வந்து இல் புகுந்தார் அவர்' எனவும், 'வேத நாயகன் வேதியர் நாயகன்'எனவும், 'வேதம் ஓர் நான்காய், ஆறு அங்கம் ஆகி' எனவும் தனது தேவாரங்களில் பல இடங்களில் வேதங்களை அங்கீகரித்துப் பாடுகிறார்.

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்

'வேதம் ஓதி, வெண்நீறு பூசி, வெண் கோவணம் தற்று' எனவும், 'வேத வேதியர், வேட நீதியர்'எனவும், 'வேதியர் விண்ணவரும் மண்ணவரும்தொழ' எனவும் பல இடங்களில் வேதத்தை அங்கீகரித்து இவரும் பாடுகிறார்.

### மாணிக்க வாசகர்

இவர் தனது திருவாசக நூலில், 'வேத மொழியர், வெண் நீற்றர், செம் மேனியர்' என்றும், 'வேதமும், வேள்வியும், ஆயினார்க்கு' என்றும், 'வேதி, போற்றி! விமலா, போற்றி!' என்றும், 'ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க' என்றும், 'இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்' என்றும் பல இடங்களில் வேத ஆகமங்களைப் போற்றிப் பாடியுள்ளார்.

### சேக்கிழார்

இவரும்'வேத நெறியின் முறைபிறழா மிக்க ஒழுக்கம் தலைநின்ற சாதி நான்கும்' என்றும், 'வேத நெறி தழைத்தோங்க! மிகு சைவத் துறை விளங்க' என்றும், 'வேதங்கள் மொழிந்த பிரான்'என்றும் வேதங்களைப் பல இடங்களிலும் பாராட்டிப் பாடியுள்ளார்.

இப்படியாக நம் தமிழின் பெரும் புலவர்களும், நயன்மார்களும் வேதங்களையும், ஆகமங்களையும் போற்றிப் பாடியிருக்க குறைமதியாளர்களின் கருத்துக்களைக் கேட்டு அந்தத் தெய்வ மறைகளைக் கைவிடுவது என்பது நம்மினத்துக்கு நாம் செய்யும் மாபாதகம் ஆகிவிடும் என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

திருமுறைகளை ஓதித் தமிழில் தான் கும்பாபிஷேகங்களைச் செய்ய வெண்டும் என்று சொல்வோரிடம் முக்கியமான இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டியிருக்கிறது.

நீங்கள் சொல்லும் திருமுறைகளைப் பாடிய அருளாளர்களே, தாம் பாடிய திருமுறைகளில் வேதங்களையும், ஆகமங்களையும் போற்றிப் பாடியிருக்க, அவற்றைக் கைவிடச் சொல்வது எப்படி நியாயமாகும்? உண்மையாக நீங்கள் திருமுறைகளைப் போற்றுகிறீர்கள் என்றால் அவை

(13ஆம் பக்கம் பார்க்க)

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

போற்றிப் பாடியிருக்கும் வேத, ஆகமங்களையும் போற்ற வேண்டும் அல்லவா? – இது முதற் கேள்வி.

திருமுறைகளைப் பாடித்தான் கும்பாபிஷேகத்தைச் செய்ய வேண்டும் என்று வாதிடும் நீங்கள், ஆலயங்கள் கட்டும் முறைமை, விக்கிரகங்கள் அமைக்கும் முறைமை, யாகங்கள் செய்யும் முறைமை என்பவை பற்றியதான வரையறைகள் திருமுறைகளில் எங்கேனும் சொல்லப்பட்டிருப்பதாய்க் காட்டுவீர்களா? மேற்சொன்னவற்றை எல்லாம் நாம் வேத, ஆகமங்களில் இருந்து தானே தெரிந்து கொள்கிறோம். ஆகம முறைப்படி கட்டிய ஆலயங்களின் கும்பாபிஷேகத்தை ஆகம மந்திரம் சொல்லிச் செய்யக்கூடாது என்பது எப்படி நியாயமாகும்?– இது இரண்டாவது கேள்வி.

இவர்களைப் போன்றோர் மொழிப்பற்றைப் பேசிப்பேசி மொழியை முடிந்தளவு தாழ்த்தி விட்டனர். இனி அதைச் சமயத்திலும் கொண்டு வந்து அதனையும் தாழ்த்தப் பார்க்கிறார்கள் போல. உண்மைச் சைவர்கள் இவர்களைப் புறந் தள்ளிவிட்டு வேத, ஆகம நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதே எனது கருத்து.

**சல்லடையார் சலிப்பு - சிட்னி முருகன் கோயில் பிரச்சனையை வாரிதியாருக்கு யாரோ சொல்லிப் போட்டினமோ ?**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**உரலார் கேள்வி :- இராவணன் சிவபக்தன் இல்லை என்று நீங்கள் சொன்னதை பலர் இன்றுவரை ஏற்க மறுக்கிறார்களே?**

**உலக்கையார் பதில் :-** அதற்கு நான் என்ன செய்ய? நான் நூல்கள் சொல்வதைச் சொல்கிறேன். அவர்கள் தாங்கள் நினைப்பதைச் சொல்கிறார்கள். அவர்களில் பலருக்கு இராமன் தன் மனைவியைத் தீக்குளிக்கச் செய்தது பெருங் குற்றமாகத் தெரிகிறது. இராவணன், மாற்றான் மனைவி என்று தெரிந்தும் சீதையை அபகரித்தது குற்றமாய்த் தெரியவில்லை. அது அவர்களின் புத்தியின் கோளாறு.

இராவணனின் தம்பி கும்பகர்ணன், விபீடணன் ஆகியோரும், மாமன் மாரீசனும் கூட இராவணனின் செயலைக் கண்டித்தார்கள். அந்த அரக்கர்களுக்குத் தெரிந்த நியாயம் கூட இந்த அரக்கர்களுக்குத் தெரியவில்லை.

இதைச் சொன்னதும் அவன் காமுகன்தான் ஆனாலும் சிவ பக்தன் என்று தொடங்குவார்கள். அதற்கான பதிலை நான் சான்றுகளோடு முன்னரே சொல்லிவிட்டேன். தேடிப்படிப்பார்களாக! (படிக்கும் வழக்கம் என்ற ஒன்று இருந்தால்)

நீங்கள் கேட்டதற்காக, நம் அடியார்கள் இருவர் இராவணன் பற்றிச் சொன்ன இரண்டு கருத்துகளை மட்டும் இங்கே பதிவு செய்கிறேன்.

ஞானசம்பந்தர் இராமேஸ்வரம் பற்றிப் பாடிய பதிகத்தில் 'மானன நோக்கியை தேவி தன்னை ஒரு மாயையால் கான் அதில் வவ்விய கார் அரக்கன் உயிர் செற்றவன் ஈனம் இலாப்



பகழ் அண்ணல் செய்த இராமேச்சுரம் ஞானமும் நன்பொருள் ஆகி நின்றது ஒரு நன்மையே' என்று இராவணின் இழிவைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறார். மான் போன்ற மருண்ட பார்வையை உடைய சீதாப்பிராட்டியை மாயம் செய்து கானகத்தில் கவர்ந்த கரிய அரக்கனாகிய இராவணனின் உயிரை நீக்கிய குற்றமில்லாத பெரும் புகழ் உடைய அண்ணலாகிய இராம பிரானால் ஆக்கப்பட்ட இராமேஸ்வரமானது உயிர்களுக்கு சிவஞானத்தையும் முத்தியையும் தரும் என்பது இப்பாடலின் பொருள்.

மாணிக்கவாசகரும் தான் இயற்றிய 'திருவுந்தியார்' பதிகத்தில், 'தேரை நிறுத்தி மலையெடுத்தான் சிரம் ஈரைந்தும் இற்றவாறு உந்தீபற இருபதும் இற்றதென்று உந்தீபற' என்று இராவணனின் ஆணவத்தையும் அதை சிவபெருமான் அடக்கிய விதத்தையும் பாடியுள்ளார்.

சிவனடியார்களாகிய நம் நாயன்மார்கள் இன்னொரு சிவனடியாரை இழிவு செய்து பாடுவார்களா ? என்னைத் திட்டும் ' மேற்படியான்கள்' இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வார்களா ?

ஒருவேளை இராவணனை இவ்வாறு இழிவு செய்து பாடியதால் மேற் சொன்னவர்களையும் கம்பன் கழக உறுப்பினர்கள் என்று இவர்கள் சொன்னாலும் சொல்வார்கள் போல?

**சல்லடையார் சலிப்பு - 'மேற்படியான்கள்' மேல் படியான்கள் போல...ஹீ..ஹீ..ஹீ..!**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# வாகன அபராதத் தொகைகளை இரவிலும் தபாலகங்களில் செலுத்துவதற்கான வசதி

போக்குவரத்து விதி மீறல்களுக்கான அபராதத் தொகையை இனி மேல் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்ட தபாலகங்களில் இரவு நேரத்திலும் செலுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்த தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.




தற்போது மேல் மாகாணத்தில் இரவு நேர தபாலகங்களில் அபராதப் பணத்தை செலுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த முயற்சி வெற்றியளித்ததையடுத்து, ஏனைய மாகாணங்களிலும் இதே நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்கு முன்னர் இதற்கான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுமென தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# இறந்த நிலையில் சிறுத்தை சாமிமலை பகுதியில் மீட்பு!

**(மஸ்கெலியா நிருபர்.செ.தி.பெருமாள்)**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட குமரி பிரிவில் தோட்ட வைத்திய சாலைக்கு அருகில் உள்ள வைத்தியர் குடியிருப்பு பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை குட்டி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று 19 ஆம் திகதி மாலை சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட குமரி பிரிவில் உள்ள தொழிலாளர்கள் பணியாற்றி கொண்டு இருந்த வேலையில் வைத்தியரின் குடியிருப்பு பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை உள்ளதை கண்டு தோட்ட முகாமை யாளருக்கு அறிவித்தனர்.

தோட்ட முகாமையாளர் இது குறித்து நல்ல தண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

சம்பவ இடத்துக்கு சென்ற நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் இறந்த நிலையில் கிடந்த சிறுத்தையை எடுத்து சென்று உள்ளனர்.



# நாடு முழுதும் அரச எதிர்ப்புப் பேரணிகளை நடத்த முழு வீச்சில் தயாரகுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

நாடு முழுவதும் அரசாங்கத்துக்கு எதிரான பேரணிகளை நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருவதுடன், எதிர்வரும் 30ஆம் திகதி இதன் முதலாவது பேரணியை நடத்தவும் தீர்மானித்துள்ளது.

வற் வரி அதிகரிப்பு, மக்களின் வாழ்க்கைச் செலவுகள் அதிகரிப்பு, தேர்தல்கள் பிற்போடப்படுகின்றமை, கருத்துச் சுதந்திரத்தை பறிக்கும் சட்டமூலங்களை நிறைவேற்றி வருகின்றமை உட்பட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வகையிலும் இந்தப் பேரணிகள் நடத்தப்பட உள்ளன.

இவ்வருடம் ஒக்டோபர் 18ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அண்மையில் அறிவித்திருந்தார்.

இதன் காரணமாக அனைத்துக் கட்சிகளும் கூட்டணிகளை இறுதிப்படுத்துவது மற்றும் பிரசாரங்களை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. அதன் பிரகாரம் எதிர்வரும் 30ஆம் திகதியுடன் ஐக்கிய மக்கள் சக்தி அரச எதிர்ப்பு பேரணி என்ற தொனிப்பொருளில் தமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளது.

இதேவேளை, ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியும் நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களையும், பேரணிகளையும் நடத்தும் நடவடிக்களை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பெப்ரவரி முதலாம் திகதியில் இருந்து நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பு

## 72 சுகாதார தொழிற்சங்கங்கள் தீர்மானம்




மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவைத் தங்களுக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார தொழிற்சங்கங்களால் எதிர்வரும் முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பினர் பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கையை ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி முதல் 5 நாள்களாக பல்வேறு கட்டங்களின் கீழ் சுகாதார தொழிற்சங்கத்தினரால் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரியே இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு மற்றும் நிதி அமைச்சுகளுடன் கலந்துரையாடிய போதிலும், இதுவரை சாதகமான பதில் எதுவும் பெற்றுக் கொடுக்கப்படவில்லையென சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.

எனவே, தமது பிரச்சினைக்கான தீர்வுக்காக அரசாங்கத்திற்கு 7 நாள்கள் கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் தீர்வு வழங்கப்படாவிடின் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இலங்கையின் பொருளாதார அடைவு மட்டம் சர்வதேச நாணய நிதியம் தரப்பில் விளக்கம்

பொருளாதார மறுசீரமைப்பின் முன்னேற்றம் மக்களிடையே பகிரப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

நாட்டிற்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழுவின் விசேட ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு மற்றும் இலங்கை அதிகாரிகளுக்கு இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமானது.

இவர்கள் கடந்த 11 ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

6 பேர் அடங்கிய சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு, மின்சார சபை, மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சு உள்ளிட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடியது.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான வேலைத் திட்டத்தை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அவர்கள் ஜனாதிபதியை அண்மையில் சந்தித்து, பொருளாதார மறுசீரமைப்பை மேற்கொண்டு இலங்கை பெற்றுக்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம் தொடர்பில் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பொருளாதார மறுசீரமைப்பின் முன்னேற்றம் மக்களிடையே பகிரப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் நேற்றைய ஊடக சந்திப்பில் வலியுறுத்தியது.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடனான ஒப்பந்தம் விரைவில் மேற்கொள்ளப்படுவது மிக முக்கியமானது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிப்புறக் கடன் வழங்குநர்களுடனான யோசனையை முன்வைப்பது முக்கியமானது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை அதிகாரிகளால் அமுல்படுத்தப்பட்டுள்ள பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மீட்சிக்கான முதல் அறிகுறிகளை வழங்கி வருகிறது. எவ்வாறாயினும், இந்த முன்னேற்றங்கள் இலங்கை மக்களின் மேம்பட்ட வாழ்க்கை நிலைமைகளாக மாற்றப்பட வேண்டும் என்பதில் சவால்கள் உள்ளன என சர்வதேச நாணய நிதியம் நேற்றைய ஊடக சந்திப்பில் தெரிவித்தது.

கடன் திட்டத்தின் இரண்டாவது மீளாய்வுக்கு முன்னதாக கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்பாடுகளை இலங்கை எட்டும் எனத் தாங்கள் நம்புகிறார்கள் என சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியுடனான கொள்கையளவிலான ஒப்பந்தத்தை முழுமையான ஒப்பந்தமாக மாற்ற வேண்டுமெனவும் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதிய தூதுக்குழு வலியுறுத்தியுள்ளது.

வர்த்தகக் கடன் வழங்குநரான சீன அபிவிருத்தி வங்கியுடனும் உடன்பாடு எட்டப்பட வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் நேற்றைய ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளது.




# உரக் கொள்வனவிற்காக மேலும் ரூ. 200 கோடி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பீடு

பெரும்போகத்தில் உரத்தைக் கொள்வனவு செய்வதற்காக மேலும் இருநூறு கோடி ரூபா நிதி விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக விவசாய சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு இதுவரை 900 கோடி ரூபா விடுவிக்கப்பட்டுள்ளதாக விவசாய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஏ.எச்.எம்.எல். அபேரத்ன தெரிவித்துள்ளார்.

ஒரு ஹெக்டேர் நெல்லுக்கு 15 ஆயிரம் ரூபா விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.



# இலங்கை மின்சார சபையின் 15 பணியாளர்களுக்கு கல்தா!

இலங்கை மின்சார சபையின் 15 ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் காசாளர்களே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சுகயீன விடுமுறையைப் பதிவு செய்து, அண்மையில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் பங்குபற்றிய குற்றச்சாட்டில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோருக்கு இடையூறு ஏற்படும் வகையில் அவர்கள் செயற்பட்டுள்ளனர் என மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, ஊழியர்கள் சிலர் பணி நீக்கம் செய்யப்பட்டமையை கண்டித்து கடும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.




# உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் கசிவு: விசேட விசாரணைக் குழுவினர் ஆராய்வு

கல்விப் பொது தராதர உயர் தர பரீட்சையின் விவசாய விஞ்ஞான பாடத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் பகுதி வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாக வெளியான சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக பரீட்சைகள் திணைக்களத்தால் விசேட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுவில் 5 அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என பிரதி பரீட்சைகள் ஆணையாளர் லசிக சமரகோன் தெரிவித்துள்ளார்.

வினாத்தாள் வெளியானமை தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் சாட்சியங்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தற்போது அம்பாறையை சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் மொரட்டுவை மகா வித்தியாலய பரீட்சை மத்திய நிலையத்தில் கடமையாற்றிய அலுவலக உத்தியோகத்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற க.பொ.த உயர்தர விவசாய விஞ்ஞான பாடத்தின் இரு பகுதி வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியாகின.

பரீட்சைக்கு முன்னதாக இரு வினாத்தாள்களும் சமூக ஊடகங்களில் வெளியானமையும் தெரியவந்தது.

இந்த நிலையில், அந்தப் பாடப் பரீட்சையை அடுத்த மாதம் முதலாம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# இந்திய வாழ் இலங்கை அகதிகளுக்கு இலங்கைக் கடவுச்சீட்டுகள் வழங்கல்

## சென்னையில் செந்தில் தொண்டமான் கையளித்தார்







ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலில் இந்திய வாழ் இலங்கை அகதிகளுக்கு உலக அங்கீகாரமிக்க கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்து அகதி வாழ்க்கை வாழ்ந்துவரும் வடக்கு – கிழக்கைச் சேர்ந்த அகதிகளுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் சர்வதேச கடவுச்சீட்டு நேற்று சென்னையில் வழங்கி வைக்கப்பட்டதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பல்வேறு காலகட்டங்களில் இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளின் போது இந்திய மண்ணை நம்பி தஞ்சம் புகுந்த வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் இந்தியாவின் பல்வேறு முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்கள் இலங்கைக்குத் திரும்புவதாயினும் வெளிச்செல்லும் அனுமதி அட்டைகள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தன.

இந்த நிலைமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குகொண்டுசென்றபோது,அவரதுவழிகாட்டுதலின் கீழ், இந்தியவாழ் இலங்கை அகதிகளுக்கு உடன் அமுலுக்கு வரும்வகையில் வரலாற்றில் முதல் தடவையாக சர்வதேச அங்கீகாரமிக்க கடவுச்சீட்டுகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன என கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

உலகில் வேறெங்கிலும் இதற்கு முன்னர் இலங்கை அரசால் இவ்வாறானதொரு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற இலங்கைக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதனூடாக உலகின் எப்பகுதிக்கும் செல்லும் தகுதியை இந்தியவாழ் இலங்கை அகதிகள் நேற்று முதல் பெற்றுக்கொள்கின்றனர்.






# டயனா தொடர்பான ஓசல ஹேரத்தின் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு அனுமதி



இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிப்பதற்கு பொருத்தமற்றவர் என உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவை ரத்து செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கவே தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்த தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உயர்நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.

சமூக செயற்பாட்டாளரான ஓசல ஹேரத் என்பவரால் இந்த மனு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று பீரித்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




# யால சரணாலயம் மீளத் திறப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சீரற்ற காலநிலை காரணமாக மூடப் பட்ட யால சரணாலயத்தின் பலடு பான பிரதான நுழைவாயில் மீள திறக் கப்பட்டுள்ளதாக ஊவா வலயத் திற்கு பொறுப்பான வனஜீவராசிகள் உதவிப் பணிப்பாளர் உபுல் இந்திரஜித் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக தொடர் மழை காரணமாக வெஹெரகல நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதால் மாணிக்க கங்கை பெருக்கெடுத்து ஓடியது. வீதிகள் நீரில் மூழ்கியிருந்த மையோடு நீர்த்தேக்கங்களும் நிரம்பி வழிந்தன. இதனால் பலடுபான நுழை வாயில் மூடப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது.



## மரக்கறி விலை உச்சம் தொட்டதனையடுத்து

# பலாக்காய், ஈரப்பலா, சூரக்காய் போன்றவற்றின் மவுசு அதிகரிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண காலநிலை மாற்றத்தால் சாதாரண மரக்கறிகளின் விலை மிகவும் உச்சம் தொட்டுள்ளது.

இதன் காரணமாக பாரம்பரிய காய் கறி கொள்வனவை பலர் கைவிட்டு பலாக்காய், ஈரப்பலாக்காய், வட்டக்காய் (சூரக்காய்), மரவள்ளிக்கிழங்கு போன்ற வற்றை அதிகளவில் கொள்வனவு செய்கின்றனர்.

இன்னும் சிலர் வள்ளல், வல்லாரை, பொன்னாங்காணி, நாட்டுக்கீரை, பசளி, குப்பைமேனி போன்ற சாதாரண கீரை வகைகளை அதிகளவில் கொள்வனவு செய்கின்றனர்.




# சிறந்த உலகைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைவோம்

## அணிசேரா அமைப்பின் மாநாட்டில் ரணில் அறைகூவல்

டிஜிட்டல் பிரிவினை மற்றும் பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் ஆயுதங்கள் வாயிலாக, அணிசேரா அமைப்பில் அங்கம் வகிக்கும் உலகின் அபிவிருத்தி அடைந்துவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மத்தியில் பெரும் சமநிலை அற்ற தன்மை உருவாகியுள்ளது என்றும், அதனால் சிறந்த உலகை உருவாக்க வலுவான மற்றும் ஒன்றிணைந்த அணிசேரா அமைப்பின் ஊடாக மேற்படி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை எட்ட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உகண்டா - கம்பாலா நகரில் “உலக சுபீட்சத்துக்காக ஒன்றிணைந்த ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ளல்” என்ற தொனிப்பொருளின் கீழ் நேற்று ஆரம்பமான அணிசேரா அமைப்பின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

உகண்டா குடியரசு ஜனாதிபதி யொவேரி முசேவேனியின் தலைமையில் 120 நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நேற்று ஆரம்பமான இந்த மாநாடு இன்று வரை நடைபெறுகின்றது.

மாற்றமடைந்துவரும் உலகிற்கு ஏற்றவாறு அணிசேரா நாடுகள் அமைப்பின் நோக்கங்களை மீளமைப்புச் செய்து, தென் துருவத்தில் அதிக அங்கத்துவம் கொண்ட அமைப்பாக மாற வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது வலியுறுத்தினார்.

அந்த மாற்றம் செல்வந்த நாடுகளின் மோதல் மற்றும் அதற்குள் தலையீடுகள் செய்யாத நாடுகளை உள்ளீர்ப்பதற்கான அழுத்தங்களுக்கு எதிரானதாக அமைந்திருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோல் தென் துருவ நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தும் நோக்கங்களை நிறைவேற்றும், பல்முனை உலகைக் கட்டியெழுப்புவதற்கு அணிசேரா நாடுகளின் அமைப்பு ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் உரையாற்றும்போது,

“அணிசேரா நாடுகளின் 19 மாநாட்டிற்கு தலைமை ஏற்றுள்ளமைக்காக உகண்டா ஜனாதிபதி யொரேவி முசேவேனிக்கு பாராட்டு தெரிவிக்கிறேன். தென்துருவ நாடுகளுக்கிடையில் பொது தெரிவுகள் காணப்பட்ட வேண்டிய தீர்மானமிக்க தருணத்தில் உகண்டா அதற்கான களத்தின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளமை காலோசிதமானதாகும்.

தொற்றுநோய் பரவல், கடன் சுமை, காலநிலை அனர்த்தங்கள், புதிய உலகளாவிய போட்டிகள் மற்றும் உலக நாடுகளும் தென் துருவமும் எதிர்கொண்ட பல்வேறு அழுத்தங்களின் பின்னர் நடத்தப்படும் முதலாவது அணிசேரா நாடுகளின் மாநாடு இதுவாகும்.

நாம் இங்கு சந்திக்கும் வேளையில் காஸா பகுதிகளிலும் அதற்கு அப்பாலான பகுதிகளிலும் மனிதாபிமான மோதல்கள் நீண்டுச் செல்கின்றன. மூன்று மாதங்களுக்கும் மேலாக பாலஸ்தீன சிவில் மக்கள் கடுமையான துயரங்களையும் இழப்புக்களையும் சந்தித்துவருவதோடு, வலயத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை என்பனவும் கேள்விக்குரியாகியுள்ளன.

இதுவரையிலும் அணிசேரா நாடுகளின் அமைப்பு அமைதிகாத்தது. காஸா எல்லைகள் அழிவடையும் வேளையில் நாம் எவ்வாறு அமைதிகாப்பது? அந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவில்லை என்பதை போலவே அங்கு அதிகளவான அப்பாவி சிவில் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அமைதி காப்பதால் நாமும் அதற்கு இணக்கம் தெரிவிப்பதை போல் உள்ளது.

உகண்டாவின் தலைமையில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் 19 ஆவது மாநாட்டின் ஊடாக காஸா பகுதிகளின் பிரச்சினைகள் தொடர்பிலும் பாலஸ்தின மக்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் சுயாதீனமானதும், சுதந்திரமானமான உரிமைகளை பறிக்க முடியாது என்ற விடயத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரியது.

காஸா பகுதிகள் தொடர்பில் தென் ஆபிரிக்கா கொண்டுள்ள உறுதியான நிலைப்பாட்டையும் நாம் வரவேற்க வேண்டும். விரைவில் மனிதாபிமான போர் நிறுத்தத்தையும், பணயக்




கைதிகளை விடுவிக்கும் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச சமூகம் வலியுறுத்தியுள்ளது. இஸ்ரேல் அல்லாத தனி இராச்சியத்துக்குள் இரு இராச்சியங்களுக்கு தீர்வை தேட முடியாது. பாலஸ்தீனம் இல்லாமல் எந்த தீர்வையும் பெற்றுக்கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் சபைக்குள் காணப்படும் யோசனைகள் மற்றும் இந்த மாநாட்டின் முன்மொழிவுகளுக்கு அமைய, மேற்குக் கரை, காஸா பகுதி மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகள் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும், காஸா பகுதியின் இன அமைப்பு மாறக்கூடாது. ஐந்து வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்

நாம் இப்போது பனிப்போரின் பின்னரான நிலைமைகளின் இறுதி நிலை மற்றும் மாற்றம் கண்டு வரும் பல்முனை உலகின் அணுகுமுறைகளை காண்கிறோம்.

21




# சிறந்த உலகைக்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி..)

புவிசார் அரசியல் முன்னணியில், முன்னைய பலவான்கள் மற்றும் பலவான்கள் என்ற அந்தஸ்த்தை தக்கைக்கும் நோக்கில் செயற்படும் தரப்பினர்களுக்கு மத்தியில் மறைமுகமான மற்றும் வெளிப்படையான மோதல்கள் மீண்டும் வெடிப்பதையும் நாம் காண்கிறோம். ஐரோப்பாவின் அட்லாண்டிக் சமுத்திரத்தின் இராணுவக் கூட்டணி வலுப்பெற்றுள்ளது. ஆயுதக் கட்டுப்பாட்டு தொடர்பிலான கடந்த கால ஒப்பந்தங்கள் முறிந்துள்ளன.

இராணுவச் செலவு வரலாற்றில் முன்னர் இல்லாத அளவை எட்டியுள்ளது. மேலும், அணு ஆயுதங்கள் குறித்து மீண்டும் பாரிய அளவில் கொள்கை ரீதியிலான கலந்துரையாடல்கள் இடம்பெற வேண்டும். இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களின், நம்மைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட பிராந்தியத்தில் ஒரு புவிசார்-மூலோபாய போட்டி உருவாகி வருகிறது. மேலும், விண்வெளி மற்றும் சமுத்திரங்கள் மோதலுக்கு சாத்தியமான தளங்களாக மாறிவிட்டன.

பிரதான சக்திகளுக்கு இடையிலான மூலோபாய போட்டியின் காரணமாக கொள்கை அடிப்படையிலான வர்த்தக பாதுகாப்புவாதத்தின் எழுச்சியால் சுதந்திர வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒருங்கிணைப்பு பின்னடைவை நோக்கி நகர்கிறது. பிரிந்து செல்லல் மற்றும் இடர்பாடுகளை மட்டுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களினால் இந்த நிலைமை மேலும் விரிவடைந்துள்ளது.

புதிய வர்த்தக முறை குறித்த ஒருதலைப்பட்சமான அறிவிப்பு, உலக வர்த்தக அமைப்பின் பன்முகத்தன்மையை மேற்கத்திய நாடுகளால் புறக்கணிக்கப்பட்டிருப்பதை காண்பிக்கிறது.

டொலர் ஒரு ஆயுதமாக மாறிவிட்டது. பொருளாதாரம் மற்றும் கடன் நெருக்கடி, காலநிலை நீதி, உணவு மற்றும் வலுசக்தி பாதுகாப்பு ஆகியவை புதிய சவால்களாக மாறியுள்ளன.

டிஜிட்டல் பிரிவினை மற்றும் பெரும் அழிவுக்கு வழிவகுக்கும் ஆயுதங்கள் வாயிலாக, அணிசேரா அமைப்பில் அங்கம் வகிக்கும் உலகின் வளர்ந்துவரும் நாடுகள் மற்றும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மத்தியில் பெரும் சமநிலை அற்ற தன்மை உருவாகியுள்ளது.

"உலக சுபீட்சத்துக்காக ஒன்றிணைந்த ஒத்துழைப்புக்களை மேலும் பலப்படுத்திக்கொள்ளல்" என்ற இந்த மாநாட்டின் தொனிப்பொருள், நமது உலகின் இரு துருவங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டிய தன் அவசியத்தை பிரதிபலிக்கிறது.

அதில் வெற்றிகாண வேண்டும் எனில், அனைவருக்குமான சிறந்த உலகை கட்டியெழுப்புவதற்கான வலுவான மற்றும் ஒன்றுபட்ட அணிசேரா அமைப்பொன்று அவசியப்படுகிறது. இதைச் செய்ய, நாம் நம்மை மீள்கட்டமைத்துக்கொள்ள வேண்டும். அணிசேரா நாடுகளின் அமைப்பு இனியும் வலுவற்ற நாடுகளின் கூட்டாக இருக்காது.

சில ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அடைந்த விரைவான முன்னேற்றம் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் காரணமாக இது நிகழ்ந்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

2050 ஆம் ஆண்டாகும்போது, உலகின் முதல் பத்துப் பொருளாதாரங்களில் பெரும்பான்மையானவை இந்த அமைப்பிற்குச் சொந்தமானவையாக இருக்கும்.

உலக விவகாரங்களில் தலைமை தாங்கக்கூடிய நாடுகள் நம்மிடையே உருவாகி வருவதையும் காணமுடிகிறது. அவர்கள் தலைமை தாங்க தயாராக இருக்க வேண்டும். ஒரு பாரிய சக்தியாக மாறுவதற்கு பழைய மற்றும் புதிய வலுவான சக்திகளுக்கு இடையே அரசியல், பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் இராணுவ புவிசார் மூலோபாய போட்டி ஏற்படும் போது நாம் நிறைவேற்ற வேண்டிய பணிகள் இருக்கின்றன.

அணிசேரா அமைப்பு உங்கள் தலைமையின் கீழ் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும். மேலும், பல்முனை உலகில் தென் துருவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளின் மிகப்பெரிய கூட்டாக அணிசேரா நாடுகளின் அமைப்பை மாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அதற்கு நாம் நமது இலக்குகளை மறுசீரமைக்க வேண்டும். வளர்ந்து வரும் பல்முனை உலகில் 'பெண்டுங்' கொள்கைளைப் பாதுகாப்பதோடு, செல்வந்த நாடுகளின் மோதல்களுக்குள் தலையீடு செய்யாத நாடுகளை உள்ளீர்ப்பதற்கான அழுத்தங்களை எதிர்த்தல், தென் துருவ நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் காலநிலை மாற்றம் தணிப்பு குறித்த அபிலாஷைகளை உள்ளடக்கிய பல்முனை உலகத்தை உருவாக்குதல் மற்றும் அணிசேரா நாடுகளின் தென் துருவ மற்றும் நட்பு நாடுகள் செயற்திறன்மிக்க கூட்டாக மாற்றுவதற்கு நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, தென் துருவம் எதிர்கொள்ளும் சமகால சவால்களை சமாளிக்கும் திறன் கொண்ட நிரந்தர செயல்பாட்டுக் கட்டமைப்பை நிறுவுவதற்கு நாங்கள் பணியாற்ற வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன். மேலும், இந்த புதிய ஒழுங்கை வடிவமைக்கும் திறன் கொண்ட அமைப்பாக நாங்கள் மாற வேண்டும்.

மது எதிர்காலம் நம் கையில் உள்ளது. அதை உருவாக்கும் அல்லது அழிக்கும் திறனும் நம்மிடமே உள்ளது. அதனை நாம் செய்வோம். அணிசேரா அமைப்பின் 19 ஆவது அரச தலைவர்கள் அமர்வை வெற்றிகரமாக ஏற்பாடு செய்ததற்காக உகண்டா ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன்." – என்றார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான கிங்ஸ் நெல்சன், நிமல் பியதிஸ்ஸ, குமாரசிறி ரத்நாயக்க, உதயகாந்த குணதிலக, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 20.01.2024

## மேஷம்

இன்றைய நாள் சாதகமான பலன்களை அளிக்காது. முக்கியமான முடிவுகளை எடுப்பதை தவிர்க்கவும். அமைதியற்ற தாகவும் பாதுகாப்பற்றதாகவும் உணர்வீர்கள். பிறரிடம் பேசும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இன்று சிறந்ததைப் பெறுவதற்கு பிரார்த்தனைகளில் ஈடுபடுங்கள்.

இன்று பணிகள் பரபரப்பாகவும் அதிகமாகவும் காணப்படும். குறித்த நேரத்தில் பணியை முடிப்பதென்பது மிகவும் கடினமாக இருக்கும். திட்டமிட்டு செய்வதன் மூலம் பணியை திறமையாக முடிக்க இயலும்.

உங்கள் அணுகுமுறையில் பொறுமை காக்க வேண்டியது அவசியம். இன்று உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொழுது சற்று வன்முறை காணப்படும். நல்லிணக்கத்தை தக்க வைத்துக்கொள்ள அதனை அவசியம் தவிர்க்க வேண்டும்.

## ரிஷபம்

ஆன்மீகச் சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமும் மந்திரங்களை ஜெபிப்பதன் மூலமும் அமைதி பெறலாம். மோசமான விளைவுகளை தடுப்பதற்கு பேச்சில் கட்டுப்பாடு தேவை. நண்பர்களை சந்திப்பதை இன்று தவிர்க்கவும்.

அதிக பணிச் சுமை காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. திறமையுடன் பணியாற்றினால் தான் பணிகளை செவ்வனே செய்ய முடியும்.

சந்தோஷமான மனநிலை காணப்படாது. மனநிலையில் மாறுபாடுகள் காணப்படும். அதனை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள அத்தகைய மனநிலையை தவிர்த்தல் வேண்டும்.

இன்று பயணங்கள் செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. பயணங்களின் பொழுது பண இழப்புகள் நேரிடலாம்.

## மிதுனம்

இன்றைய தினம் உங்களுக்கு ஒரு சவாலான தினமாக இருக்கும். என்றாலும் இன்றைய நிகழ்வுகளிலிருந்து நீங்கள் நிறைய அனுபவங்களை கற்றுக் கொள்வீர்கள். இன்றைய சவால்களை எதிர்கொள்வதை கடினமாக உணர்வீர்கள்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியமில்லை. இது உங்கள் மேலதிகாரிகளை அதிருப்திக்குள்ளாக்கும்.

உங்கள் துணையுடன் முரண்பட்ட கருத்து கொண்டிருப்பீர்கள். அதனால் தவறான புரிந்துணர்வு ஏற்பட்டு திருப்தியும் நல்லலிணக்கமும் பாதிக்கும்.

இன்று செலவினங்கள் அதிகமாக இருக்கும். செலவுகளை சமாளிக்க சிறிய அளவில் கடன்களை வாங்குவீர்கள்.

## கடகம்

உங்கள் நீண்ட நாள் விருப்பம் இன்று நிறைவேறும். உங்கள் தனிப்பட்ட திறன் பலனளிக்கும். நீண்டகால திட்டமிடலுக்கு இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆன்மீக காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிக்கும் நாள். திறம்பட செயல்பட்டு தரமான பணிகளை வழங்குவீர்கள். அது உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் ஆழ்ந்த அன்பு கொண்டு அதனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை அது மிகவும் சந்தோஷப்படுத்தும். மகிழ்ச்சியும் புரிந்துணர்வும் அதிகரிக்கும்.

இன்று சிறந்த நிதிவளர்ச்சி காண்பீர்கள். நிதி சம்பந்தமாக விரைந்து முடிவெடுப்பீர்கள்.

## சிம்மம்

உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள உகந்த நாள். வெற்றிக்கு வழிவகுக்கும் நாள் . உங்கள் கடின உழைப்பு மற்றும் உறுதிப்பாடு வெற்றியைத் தரும். இன்று நாள் முழுவதும் நீங்கள் புது மலர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூட இன்று எளிதாகச் செய்வீர்கள். அலுவல் சம்பந்தமான பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் உண்மையான மற்றும் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். உங்கள் உண்மையும் விசுவாசமும் உங்கள் துணை உங்களை நன்கு புரிந்து கொள்ள உதவும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு கணிசமாக உயரும்.

## கன்னி

இன்று சவாலான சூழ்நிலைகளை சந்திக்கவேண்டியிருக்கும். முன்னேற்றத்தில் தடை இருக்கும். நீங்கள் முயற்சிகள் எடுக்க வேண்டியது அவசியம். பெரிய அளவில் யோசித்து இலட்சியத்தை அடைய வேண்டும்.

இன்று பணியில் சிறது மந்தத்தன்மை காணப்படும். திறம்பட பணியாற்றுவதற்கான தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையுடன் செயல்பட்டு பணிகளை முடிக்க வேண்டும். அப்பொழுது தான் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெற முடியும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உரையாடும் பொழுது கட்டுப்பாட்டை இழக்க வாய்ப்பிருக்கிறது என்பதனால் உங்கள் அணுகு முறையில் பொறுமை அவசியம். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ள நட்புணர்வுடன் உணர்வுகளை பகிர்ந்துகொள்ளுங்கள்.

## துலாம்

நீங்கள் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கும் பலன்கள் இன்று கிட்டாது. இன்று அவசரமான நடவடிக்கைகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். தன்னம்பிக்கை இழக்க நேரிடலாம். நகைச்சுவை உணர்வோடும் டேக் இட் ஈஸி என்று நடந்து கொண்டால் நற்பலன்களைப் பெறலாம்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.சக ஊழியர்களிடமிருந்து பிரச்சினைகளை எதிர்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் இன்று பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அது நல்லிணக்கத்தை பாதிக்கும். மாறக்கூடிய சூழ்நிலைகளை சமாளிக்க வளைந்து போகும் அணுகுமுறை தேவை.

தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.

## விருச்சிகம்

இன்று மிகச் சிறந்த நாள். ஆரம்பத்தில் தடைகள் இருந்தாலும் வெற்றி நிச்சயம் கிடைக்கும். சிறு ஏமாற்றங்களை சந்திக்க நேரும். உண்மையான முயற்சியின் மூலம் நினைத்ததை அடைவீர்கள்.

பணியில் முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களின் திறமையான செயல்பாட்டைக் கண்டு சகபணியாளர்கள் பொறாமைப்படுவார்கள். வேலையில் முழு திருப்தி கிடைக்காது.

மனநிலையில் மாறுபாடுகள் காணப்படும். அதனை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். ஆனால் உங்கள் துணை எதையும் லேசாக எடுத்துக்கொள்ளும் அளவுக்குக் கூலான மனநிலையில் காணப்படுவார்.

பணப்புழக்கம் அனுகூலமாகக் காணப்படும். அதே சமயத்தில் சில செலவுகளை எதிர்கொள்ள நேரிடும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.01.2024


தனுசு

இன்று மிகச்சிறந்த நாள். முயற்சிகளில் எளிதில் வெற்றி கிடைக்கும். சுய முன்னேற்றத்தின் மூலம் வளர்ச்சி காண்பீர்கள். திருப்தி மற்றும் சாதனைகள் இன்று சாத்தியம்.

பல புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கப்பெறுவதன் மூலம் திருப்தி அடைவீர்கள். பணியில் பெரிய அளவில் சாதித்ததாக உணர்வீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் நல்ல ஆலோசனைகள் செய்வதற்கு ஏற்ற நாள். அப்படிச் செய்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை பராமரிக்கலாம். மேலும் நல்ல புரிந்துணர்வுக்கு அது வழிவகுக்கும்.

நிதிநிலைமை மிகவும் முன்னேற்றகரமாக அதிக பணத்துடன் காணப்படும். ஊக்கத்தொகை அல்லது இதர வகையில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.

இன்று நல்ல உடல்நிலை காணப்படும்.


கும்பம்

இன்று உங்கள் இலட்சியங்களை அடைய சில வசதிகளை இழக்க நேரிடும். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய தினம் ஏற்புடையதல்ல. இன்று உங்கள் மனம் ஊசலாடிக் கொண்டிருக்கும்.

பணியில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்காது. பணியை குறித்த நேரத்தில் முடிப்பதென்பது கடினமாக இருக்கும். முறையாக திட்டமிடுவது மிகவும் அவசியம்.

உங்கள் துணையிடம் மனநிலையை இழக்க நேரிடும் என்பதால் எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். அது தான் உங்களுக்கு திருப்தியளிக்கும்.

அதிகமான அளவில் பணம் காணப்படாது. குடும்பச் செலவினங்கள் ஏற்படும். இது உங்கள் செலவினங்களை அதிகரிக்கும்.


மகரம்

இன்று சராசரி பலன்களே கிடைக்கும். பொறுமையும் உறுதியும் கடைபிடித்தால் இன்று நல்ல நாளாக அமையும். வெற்றி கிடைக்கும். மந்தமான நிலையை மாற்றி மகிழ்ச்சியாக இருக்க முயலுங்கள்.

குறித்த நேரத்துக்குள் பணிகளை முடிக்க கடினமாக போராட வேண்டியிருக்கும். வேலையில் துல்லியமான தரத்தை வழங்கத் தவறுவீர்கள். உங்கள் பணியை முறையாக திட்டமிடுங்கள்.

உங்கள் துணையிடம் எரிச்சலை வெளிப்படுத்துவீர்கள். அது மகிழ்ச்சியையும் நல்லிணக்கத்தையும் பாதிக்கும்.

பணம் சம்பாதிப்பதற்கான மிதமான நிலையே பொதுவாக காணப்படுகின்றது. உங்கள் பணத் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.


மீனம்

இன்று பிரகாசமான வளம் நிறைந்த நாள். தன்னம்பிக்கை அதிகமாகக் காணப்படும். உங்கள் விருப்பங்கள் மேம்படும். உங்கள் முடிவில் உறுதி காணப்படும்.

பதவி உயர்வு என்ற பெயரில் உங்களுக்கு வெகுமானம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமையான செயல்பாடு உங்கள் மேலதிகாரியின் கவனத்தை ஈர்க்கும்.

நீங்கள் உங்கள் எண்ணத்தையும் நோக்கத்தையும் உங்கள் துணையிடம் பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று நேரத்தை மகிழ்ச்சியாகச் செலவிடுவீர்கள்.

உங்கள் பணியிலிருந்து ஊக்கத் தொகை அல்லது இதர தொகை உங்களுக்கு கூடுதலாக கிடைக்கும். உங்கள் கடின உழைப்புக்கான பலனாக இந்த சிறப்புத் தொகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.







# தமிழகம் சம்பியன்களை உருவாக்கிய பூமி: சென்னையில் பிரதமர் மோடி பாராட்டு




"இந்தியாவில் விளையாட்டுத் துறையில் சம்பியன்களை உருவாக்கும் பூமி தமிழகம். டென்னிஸ் சம்பியன் அமிர்தராஜ் சகோதரர்கள், ஒலிம்பிக்கில் இந்தியாவை தங்கப் பதக்கம் வெல்ல வழிநடத்திய இந்தியாவின் ஹொக்கி தலைவர் பாஸ்கரன், சதுரங்க வீரர்கள் விஸ்வநாதன் ஆனந்த், பிரக்ஞானந்தா மற்றும் பரா ஒலிம்பிக் சம்பியன் மாரியப்பன் உள்ளிட்ட பலரும் இங்கிருந்து வந்தவர்கள்." என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 இன் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"நாடு முழுவதிலும் இருந்து சென்னைக்கு வந்துள்ள அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்களுக்கு எனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஒரே பாரதம், உன்னத பாரதம்" என்ற உண்மையான உணர்வை நீங்கள் ஒன்றாக வெளிப்படுத்துகிறீர்கள். தமிழ்நாட்டின் அன்பான மக்கள், அழகான தமிழ் மொழி, அதன் கலாசாரம் மற்றும் உணவு வகைகள் விளையாட்டு வீரர்களான நீங்கள் உங்களது இல்லத்தில் இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

தமிழ்நாட்டின் விருந்தோம்பல் அனைத்து இதயங்களையும் வெல்லும். கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் வீரர்களின் திறன்களை வெளிப்படுத்த வாய்ப்பாக அமையும். இங்கு கிடைக்கும் புதிய நட்புகளும் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்.

1975 ஆம் ஆண்டு ஒளிபரப்பைத் தொடங்கிய சென்னை தூர்தர்ஷன் நிலையம் இன்று புதிய பயணத்தைத் தொடங்கியுள்ளது. 8 மாநிலங்களில் 12 ஆகாஷ்வாணி பண்பலைத் திட்டங்கள் 1.5 கோடி மக்களைச் சென்றடையும். இந்தியாவில் விளையாட்டுத் துறையில் சம்பியன்களை உருவாக்கும் பூமி தமிழகம்.

டென்னிஸ் சம்பியன் அமிர்தராஜ் சகோதரர்கள், ஒலிம்பிக்கில் இந்தியாவை தங்கப் பதக்கம் வெல்ல வழிநடத்திய இந்தியாவின் ஹொக்கி தலைவர் பாஸ்கரன், சதுரங்க வீரர்கள் விஸ்வநாதன் ஆனந்த், பிரக்ஞானந்தா மற்றும் பரா ஒலிம்பிக் சம்பியன் மாரியப்பன் உள்ளிட்ட பலரும் இங்கிருந்து வந்தவர்கள்.

தமிழ்நாட்டின் சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு பெரிய நகரங்கள் விளையாட்டு வீரர்களை வரவேற்க தயாராக உள்ளன. பங்கேற்பாளராக இருந்தாலும் சரி, பார்வையாளராக இருந்தாலும் சரி, சென்னையின் கண்கவர் கடற்கரைகள் அனைவரையும் ஈர்க்கும்.

மதுரையின் பிரமாண்டமான கோயில்கள், திருச்சியின் கோயில்கள் மற்றும் அதன் கலை மற்றும் கைவினைப் பொருள்கள், உழைப்பு நிறைந்த கோயம்புத்தூர் நகரம் ஆகியவற்றின் சிறப்புகளும், தமிழ்நாட்டின் நகரங்களில் கிடைக்கும் அனுபவங்களும் மறக்க முடியாதவை." – என்றார்.

# விளையாட்டுத் துறையிலும் தமிழகத்துக்கு முக்கிய இடம்

## - அமைச்சர் உதயநிதி தெரிவிப்பு

"இந்தியாவில் கல்வி, மருத்துவம் என்றால் தமிழகத்தையே முதன்மை மாநிலமாகச் சொல்வார்கள். இன்றைக்கு விளையாட்டுத் துறையிலும் இந்தியாவிலேயே தமிழகம் மிக முக்கியமான மாநிலம் என்று கூறும் வகையில் உயர்ந்திருக்கிறது."

– இவ்வாறு தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னையில் நேற்று இடம்பெற்ற கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2021 ஆம் ஆண்டில் இருந்து மாநில அளவிலும், இந்தியா அளவிலும், சர்வதேச அளவிலான போட்டிகளை வெற்றிகரமாக தமிழகத்தில் நடத்தி வருகிறோம். செஸ் ஒலிம்பியாட் போட்டியை மிகவும் குறைவான நேரத்தில் சிறப்பாக ஏற்பாடுகள் செய்து வெற்றிகரமாக தமிழக அரசு நடத்திக்காட்டியது. அது எங்களது திறமைக்கான சான்றாக விளங்கி வருகிறது. அதனை அடுத்து ஆசிய ஹொக்கி கோப்பை, ஸ்குவாஷ் உலக கோப்பை உள்ளிட்ட பல தொடர்களை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம்.



எப்படி நம்முடைய தமிழக முதல்வரின் திராவிட மாதிரி அரசில் அனைத்து துறைகளிலும், இந்திய ஒன்றியத்துக்கே வழிகாட்டுகின்ற வகையில் செயல்பட்டு வருகிறதோ, அதேபோல, நம்முடைய விளையாட்டுத் துறையிலும் பல்வேறு சாதனைகளையும் படைத்து வருகிறது. இந்தியாவில் கல்வி, மருத்துவம் என்றால் தமிழகத்தையே முதன்மை மாநிலமாக சொல்வார்கள். இன்றைக்கு விளையாட்டுத் துறையிலும், இந்தியாவிலேயே தமிழ்நாடு மிக முக்கியமான மாநிலம் என்று கூறும் வகையில் உயர்ந்திருக்கிறது.

பொதுவாக விளையாட்டுப் போட்டிகள் என்றால், வீரர்கள் வீராங்கனைகள் தான் பங்கேற்பார்கள். ஆனால், முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் மூலம் பல்வேறு தரப்பினரையும் விளையாட்டு வீரர்களாக உருவாக்கியிருக்கிறோம். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் 76 பயிற்சியாளர்களை நியமித்துள்ளோம். போட்டிகளில் வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு ஏராளமான பரிசுத் தொகைகளையும் தமிழக அரசு வழங்கி வருகிறது." – என்றார்.

# பாகிஸ்தான் - ஈரான் பரஸ்பர தாக்குதல்: அமைதியை பேணுமாறு ஐ.நா. அழைப்பு




எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் காரணம் கூறி பாகிஸ்தான், ஈரான் நாடுகள் பரஸ்பர வான்வழித் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து இரு நாடுகளும் அமைதி காக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையும், அமெரிக்காவும் அழைப்பு விடுத்துள்ளன.

இஸ்ரேல் – ஹமாஸ் போருக்கு பின்னர் ஆயுத பலமுள்ள இரண்டு அண்டை நாடுகள் அதன் எல்லைகளின் மீது நடத்தும் இராணுவத் தாக்குதல்கள் உலக அளவில் பதற்றத்தை அதிகரிக்கச் செய்துள்ளன.

வியாழக்கிழமை ஈரானில் உள்ள தீவிரவாத இலக்குகள் மீது பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் 9 பேர் பலியாகியுள்ளனர் என ஈரான் அரசு ஊடகம் உறுதி செய்தது.

முன்னதாக பாகிஸ்தான் மீது ஈரான் நடத்திய தாக்குதலில் பாகிஸ்தானில் 2 சிறுமிகள் உயிரிழந்தனர் என அறிவிக்கப்பட்டது. இதற்கு கொடுக்கப்பட்ட பதிலடியாக ஈரான் மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி இருந்தது.

அணு ஆயுத பலம் கொண்ட பாகிஸ்தானும், ஈரானும் இப்படி மோதிக் கொள்வது இது முதல் முறையில்லை என்றாலும் ட்ரோன், ஏவுகணைகள் வீசி தாக்கிக் கொண்டதால் இந்த தாக்குதல் சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளது.

இந்த தாக்குதல் குறித்து ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரஸ், இருநாடுகளும் அதிகபட்ச கட்டுப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அவரது செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக், "பொதுச் செயலாளர் ஈரான், பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையேயான இராணுவத் தாக்குதல்களால் இரண்டு பக்கமும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இது குறித்து ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளார்." – என்றார்.

இதுதொடர்பில் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு பேரவையின் செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி கூறுகையில்,

"அமெரிக்கா நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறது. மேலும் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் தொடர்பில் உள்ளது. ஆயுத பலமுள்ள இரண்டு நாடுகள் மீண்டும் மோதிக் கொள்வதை நாங்கள் பார்க்க விரும்பவில்லை. ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்பு பாகிஸ்தான் அதுகுறித்து அமெரிக்காவிடம் தெரிவித்தது எனக்குத் தெரியாது." – என்றார்.

மேலும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்குமா என்ற கேள்விக்கு பதில் அளிக்க கிர்பி மறுத்துவிட்டார்.

அமெரிக்காவின் செய்தித் தொடர்பாளர் மேத்திவ் மில்லர் கூறுகையில்,

"இது எந்த வகையிலும், வடிவத்திலும் அதிகரிக்கும் என்று நாங்கள் நம்பவில்லை. நேட்டோ இல்லாத நாடுகளில் பாகிஸ்தான் அமெரிக்காவின் முக்கியமான கூட்டாளியாகும். அது அப்படியேத் தொடரும் என்றாலும் இந்த விடயத்தில் நாங்கள் அமைதியை வலியுறுத்துவோம்." –என்றார்.

# ரஷ்யாவின் எண்ணெய் களஞ்சியம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதலை நடத்தியது

ரஷ்யாவின் தென் பிராந்தியத்தில் உள்ள எண்ணெய் களஞ்சியசாலை உக்ரைனின் ட்ரோன் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

இந்த தாக்குதலில் களஞ்சியசாலையின் பெரும்பகுதியில் தீ பரவியுள்ளது.

எண்ணெய் களஞ்சியசாலையின் நான்கு குதங்களில் தீ பற்றியுள்ளது. இதனைத் தொடர்ந்து 1000 சதுர மீற்றர் பரப்பிற்கு தீ பரவியுள்ளது.

இருப்பினும், இதனால் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என களஞ்சியசாலை அமைந்துள்ள பிராந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைனின் ட்ரோன் தாக்குதலை முறியடிக்க முற்பட்ட போது, தீப்பிழம்புகள் எண்ணெய் களஞ்சியசாலையில் வீழ்ந்து தீப்பற்றியதாக பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய எண்ணெய் களஞ்சியசாலை மீது இரண்டு நாள்களுக்குள் இரண்டாவது தடவையாக உக்ரைன் ட்ரோன் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.



ரஷ்யாவில் அமைந்துள்ள பிரதான எண்ணெய் களஞ்சியசாலையை இலக்கு வைத்து கடந்த வியாழக்கிழமையும் உக்ரைன் ட்ரோன் தாக்குதலை நடத்தியது. எனினும், அதனை தாக்கி அழித்ததாக ரஷ்ய தரப்பில் கூறப்பட்டது.



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை உடன் மீளப் பெறுக!

## இலங்கை அரசிடம் ஐ.நா. வலியுறுத்து

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை உடனடியாக மீளப் பெறுமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரசு முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அதீத கவனம் செலுத்தியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் ஊடகப் பேச்சாளர் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, இலங்கை அரசு முன்வைத்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வது இலங்கையின் உள்ளகப் பாதுகாப்பு தொடர்பிலான சிறந்த மறுசீரமைப்பின் ஒரு முயற்சியாகக் காணப்பட்டாலும், உத்தேச புதிய சட்டமூலம் ஊடாக கடந்த காலத்தில் இருந்து நிலவிய மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்கள் அவ்வாறே இடம்பெறும் அபாயம் காணப்படுகின்றது என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச சட்டமூலத்தில் பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணம், தடுப்புக் காவல் உத்தரவின் சட்டபூர்வத் தன்மையைச் சவாலுக்குட்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், தடுப்புக் காவல் இடங்களைப் பார்வையிடுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இருக்கின்ற வாய்ப்புகளை வரையறுக்கும் விடயமும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, சர்வதேச மனித உரிமை கொள்கைகளுக்கு ஏற்றால் போன்று, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைத் திருத்தியமைக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.



# யால அடர்ந்த காட்டில் கஞ்ச செய்கை ரூ.6 கோடி கஞ்சாவுடன் மூவர் கைது!

இராணுவத்தினருக்கு கிடைத்த உளவுத் தகவல் ஒன்றின் பேரில் யால வனப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 6 கோடி ரூபா மதிப்புள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்ற. முன்தினம் 18 ஆம் திகதி யால வனப் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது விற்பனைக்கு தயாராக இருந்த 1,570 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதன்போது கஞ்சா மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யால வனப்பகுதியில் சுமார் 08 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சுஹந்திரமாறு பகுதியில் நாலரை ஏக்கர் காணியில் கஞ்சா விவசாயம் செய்யப்பட்டு விற்பனைக்கு தயார் படுத்தப்பட்டிருந்த நிலையிலேயே இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.